# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 6
குவிப்பு - 08
பக்கங்கள் - 12

விலை ரூபா 12.00
ஓகஸ்ட், 2003

THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Mannar, Sri Lanka. T. P: 023 - 2232377


# நுகர்வுக் கலாச்சாரத்திற்கு எதிராக
# நாம் போர் தொடுக்க வேண்டும்

## மடு ஆவணித் திருவிழாவில் யாழ் ஆயர்



போர் நிறுத்தப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் நுகர்வுக் கலாச்சாரத்திற்கு மக்கள் அடிமையாகி வருகின்றனர். இந்நுகர்வுக் கலாச்சாரத்திற்கு எதிராக இன்று நாம் போர் தொடுக்க வேண்டும். அழிவுகளும் உயிரிழப்புக்களும் அதனால் மக்கள் அனுபவித்த பல்வேறு இன்னல்கள் எல்லாம் ஓரளவிற்கு இன்று குறைந்து விட்டன. ஆனால் கலாச்சார சீரழிவு என்ற போரில் மக்கள் சிக்கியுள்ளனர். இது குறித்து சகலரும் அவதானமாக இருக்க வேண்டும் என யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை மடுத்திருப்பதியின் ஆவணித்திருவிழா திருப்பலியில் மறையுரையாற்றும்போது தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறுகையில் (தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)


தேசிய ரீதியில் மன். சவேரியார் ஆண்கள் கல்லூரி

# மீண்டும் சாதனை




அதிபர்
அருட்சகோ.
ஸ்ரனிஸ்லோஸ்

பிரதி அதிபர்
அருட்சகோ.
றெஜினோல்ட்



இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சமாதான உதைபந்தாட்ட போட்டி இம்மாதம் 18 - 23 ந் திகதிவரை கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இதில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை தேசிய ரீதியில் சம்பியனாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. இக்கல்லூரியின் உதைபந்தாட்ட அணி இதற்கு முன்னரும் பல தடவைகள் தேசிய ரீதியில் முதலிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் பங்கு பற்றிய வீரர்களையும், பயிற்றுவிப்பாளர் திரு. ஞானராஜ் அவர்களையும், கல்லூரி அதிபர் சகோ. ஸ்ரனிஸ்லோஸ், பிரதி அதிபர் சகோ. றெஜினோல்ட் மற்றும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் மன்னா பாராட்டி நிற்கிறது.

# மடுப்பதியில் மக்கள் வெள்ளம்



இவ்வாண்டும் ஆவணித்திருவிழாவின்போது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் மடுத்திருப்பதிக்கு யாத்திரை மேற்கொண்டிருந்தனர். இம்மக்கள் தொகை ஏறக்குறைய 3 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. திருநாள் தினத்தன்று மறையுரையை தமிழில் யாழ் மறைமாவட்ட ஆயரும் சிங்களத்தில் சிலாப மறைமாவட்ட ஆயரும் நிகழ்த்தினர். கிறிஸ்தவ விவகார அமைச்சர் யோண் அமரதுங்க, புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, மற்றும் அமைச்சர் ரவி கருணநாயக்க பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட மேற்படி விழாவில் திருடர்களின் கைவரிசை எல்லாக் காலத்தையும்விட அதிகமாக இருந்தது வருத்தத்திற்குரியதாகும். இதேவேளை பாப்பரசரினால் ஆசீர்வதிக்கப்பட்ட தென்னிலங்கையிலிருந்து எடுத்துவரப்பட்ட மடுமாதாவின் திருச்சுரூபம் பிரமனாளங்குளத்தில் நிறுவப்பட்டது. இராணுவத்தினரும் இன்னும் சிறப்பாக விடுதலைப்புலிகளும் மக்களுக்கு எந்தவிதமான இடையூறுகளுமின்றி தம் பதிவுப் பணிகளையும் சோதனைப்பணிகளையும் இலகுவாக்கி வேகமாக மேற்கொண்டமை குறித்து பொதுமக்கள் சார்பாக மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர்
### ஒரே நாளில் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்!

பி. ஏ. சிரான், பி. ஏ. சிறியான் ஆகிய இரு சகோதரர்கள் ஓகஸ்ட் மாதம் 19ம் திகதி 2003ம் ஆண்டு பேரா... ...ஞ்சித ஆண்டகையால் கொழும்பில் குருக்களாக திருநிலைப்படுத்த... கொழும்... தலுபபொல் என்னும் இடத்தைச் சேர்ந்த பி. ஏ. சிரான் கொழும்பு ம... ...திற்கும் ... ஏ. சிறியான் இரத்னபுர மறைமாவட்டத்திற்குமாக திருநிலைப்படுத்தப...

# மன்னாரில் வெரித்தாஸ்
# வானொலிக் குழுவினர்



வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியினர் கடந்த 7. 8. 2003 அன்று மன்னாருக்கு வருகை தந்தனர். மன்னார் நகரசபை கேட்போர் அரங்கில் இவர்களுக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் இருந்தும் யாழ், வன்னி, வவுனியா போன்ற இடங்களிலிருந்தும் வந்திருந்த வெரித்தாஸ் வானொலி நேயர்கள் இச்சந்திப்பு நிகழ்வில் பங்கெடுத்தனர். மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலைய இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் இந்நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தார். (மேலதிக படங்கள் 3ம் பக்கத்தில்)

## தொலைபேசிகள் மூலம்
## திருத்தந்தையின் செய்தி பரப்பப்படுகிறது



திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பருடைய பாப்பரசர் பணியின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி வத்திக்கான் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு நடவடிக்கையாக கையடக்கத் தொலைபேசிகள் மூலமாக பாப்பரசரின் செய்தி அனுப்பி வைக்கப்படுகிறது. இத்தாலிய இளைஞர்கள் மத்தியில் இக்கையடக்கத் தொலைபேசிகள் மூலம் தினமும் பாப்பரசரின் செய்தியைக் கேட்பதில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளதாக வத்திக்கான் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. பிறேஸில் நாட்டில் போர்த்துக்கேய மொழியில் இச்செய்தி வெகு விரைவில் ஒலிக்கவுள்ளது. அயர்லாந்தில் ஆங்கில மொழியில் இச்செய்தி அனுப்பப்படவுள்ளது.

"நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்" (தி.பா 105 : 33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

# நமது திருவிழாக்கள்?

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது நமது மூதாதையரின் முதுமொழி. நமது ஊர்கள் தோறும் வானளாவிய ஆலயங்கள் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. அவை நமது விசுவாசத்தின் உன்னத சின்னங்களாக நின்று நிலைக்கின்றன. இந்த ஆலயத்தின் திருவிழாக்களை நாம் வருடா வருடம் தவறாது கொண்டாடுகின்றோம். இவ்விழாக்கள் நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. ஆனால் இவ்விழாக்கள் காலப்போக்கில் அர்த்தம் இழந்து – வெற்றுச்சடங்குகளாக – சம்பிரதாயங்களாக – ஆடம்பரங்களாக மாறிவிட்டன. இவ்விழாக்களின் உண்மைப் பொருளை நாம் உரத்து உரைக்க வேண்டும்.

### 'டி' யில் நடந்தேறிய விழாக்கள்

பழைய காலத்திலே ஒரு திருவிழா என்றால் அந்த ஊர்ப் பெரியவர்கள் தங்கள் ஊர்ப் பாதுகாவலரின் 'முடி'யை எடுத்துவர மேற்றாணியாரிடம் போவார்கள். முடி வந்தபின்னர் நோவினை முதல் நாளில் 'கொடி' ஏற்றுவார்கள். அந்தக் கொடி ஏறும்போது 'வெடி' வெடிப்பார்கள். அதன்பின் திருவிழா தொடங்கிவிட்டது இனி என்ன நமக்கு ஒரே கொண்டாட்டம்தானே என்று சொல்லி 'குடி'ப்பார்கள். பின்னர் 'தடி' எடுத்து ஒருவர் ஒருவரோடு 'அடி'த்துக்கொள்வார்கள். ஆகவே ஒரு திருவிழா என்றால் முதலில் முடி அதன்பின் கொடி பின்னர் வெடி அதன்பின் குடி பின்னர் தடி பின்னர் அடி என்று சொல்லப்படுவதுண்டு.

இன்று நமது திருவிழாக்களில் இந்த 'டி' க்கள் எல்லாம் இல்லாவிட்டாலும் அதன் எச்ச சொச்சங்கள் சில இன்னும் ஒட்டிக்கொண்டு இருக்கவே செய்கின்றன.

### விவிலியம் காட்டும் விழா

திருவிவிலியத்தில் கொண்டாட்டம் அல்லது விழா எந்த அடிப்படையில் நடைபெறுகின்றது என்று சிந்திக்கின்றபொழுது அது மீளக்கண்டு பிடிக்கப்படுகின்ற – திரும்பிவருகின்ற அதாவது மனமாற்ற அனுபவத்தின் அடிப்படையில்தான் இடம்பெறுகின்றது என்பதை தெரிந்துகொள்ளலாம்.

லூக்காஸ் நற்செய்தி 15ம் அதிகாரத்தில் காணாமல்போன ஆடு பற்றிய உவமை, காணாமல்போன பணம் பற்றிய உவமை, காணாமல்போன மகன் பற்றிய உவமை ஆகியவற்றில் இந்த உண்மை தெளிவாகக் காணப்படுகிறது.

காணாமல்போன ஆடு மீண்டும் கண்டுபிடிக்கப்படுகின்றபோது அந்த மேய்ப்பனின் வீட்டில் கொண்டாட்டம் – விழா நடைபெறுகின்றது. காணாமல்போன ஆட்டைக்கண்டு பிடித்ததும் "வீட்டுக்கு வந்து நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து 'என்னோடு மகிழுங்கள் ஏனெனில் காணாமல்போன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்' என்பார்." காணாமல்போன பணம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதும் "அவர் தோழியரையும் அண்டை வீட்டாரையும் அழைத்து என்னோடு மகிழுங்கள். ஏனெனில் 'காணாமல்போன திராக்மாவை கண்டுபிடித்து விட்டேன் என்பார்." அதேபோன்று காணாமல்போன ஊதாரி மகன் மீண்டும் திரும்பி வந்தபோது அந்த வீட்டில் பெரிய கொண்டாட்டம் நடைபெறுகின்றது. "தந்தை தம் பணியாளரை நோக்கி, 'முதல் தரமான ஆடையை கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள். இவனுடைய கைக்கு மோதிரமும் காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள் நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம்.' என்றார்."

கொண்டாட்டங்கள் – விழாக்கள் நமக்கு தேவை. அவை நமது சமூக வாழ்வுக்கு அவசியமானவை. ஆனால் அந்த விழாக்கள் வெறும் வெற்றுச் சடங்குகளாக – அர்த்தம் இழந்த ஆடம்பரங்களாக மாறிவிடக்கூடாது.

### ஆண்டவர் அருவருக்கும் திருவிழா

"நீங்கள் காட்டும் தூபம் எனக்கு அருவருப்பையே தருகிறது. நீங்கள் ஒழுங்கீனமாகக் கொண்டாடும் அமாவாசை ஓய்வுநாள் வழிபாட்டுக் கூட்டங்களை நான் சகிக்க மாட்டேன். உங்கள் அமாவாசை திருவிழாக்கூட்டங்களையும் என் உள்ளம் வெறுக்கின்றது. அவை என்மேல் விழுந்த சுமையாயின. அவற்றைச் சுமந்து சோர்ந்து போனேன்." ( எசாயா 1 : 13 ) என ஆண்டவர் கூறும் வார்த்தைகள் சிலவேளை எமக்கும் பொருத்தமாக இருக்கும். விழாக்கொண்டாடுவதற்கு முதல் நடைபெற வேண்டிய காரியத்தை ஆண்டவர் தொடர்ந்து சொல்லுவார். "உங்களை கழுவித் தூய்மைப்படுத்துங்கள். உங்கள் தீச்செயலை என் முன்னிருந்து அகற்றுங்கள். தீமை செய்தலை விட்டொழியுங்கள். நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்."

### இழந்த அர்த்தத்தை மீளக் கண்டுபிடிப்போமா?

இன்று நம்முடைய ஆலயத் திருவிழாக்களில் மாலை, தோரணங்கள் சோடனைகள், அழகிய மின்விளக்குகள், ஆடம்பர நவீன இசைகள், புத்தாடை புரியாணிச் சாப்பாடு என்று திருவிழா களை கட்டிவிடும். இவை எல்லாம் தேவையற்றவை என்பது அல்ல. ஆனால் இந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடுகளுக்கு முன்னர் நடைபெற வேண்டிய அடிப்படையான மனமாற்ற அனுபவம் இடம்பெறுகின்றதா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒன்பது நாள் நோவினை, ஆறு நாள் நோவினை, மூன்று நாள் நோவினை என்று இந்த ஆயத்த நாள் வழிபாடுகள், மறையுரைகள் அனைத்துமே புதுப்பிறப்பின் அனுபவத்திற்குள் – ஆண்டவருக்குள் மீளக் கண்டுபிடிக்கப்படுகின்ற அனுபவத்திற்குள் – இறைத்தந்தையிடம் திரும்பி வருகின்ற அனுபவத்திற்குள் நம்மை இட்டுச் செல்ல வேண்டும். அந்த மனமாற்ற மகிழ்ச்சியின் வெளிப்பாடே கொண்டாட்டமாக – விழாவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

நமது திருவிழாக்களில் இழந்துபோன அர்த்தத்தை மீளக் கண்டுபிடிப்போமா?

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும் வரை

அன்புடன் – அருட்பணியாளர் நேசன்

பதிப்பாசிரியர்

# நற்செய்திப் பணி வாழ்வில் 25 ஆண்டுகள்


T. அல்பேட்


A. அமலா


S. பெனிற்றா

1977ம் ஆண்டில் இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு தென் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்தவர்களாய் வந்த தமிழ் பேசும் மக்கள் மன்னார் மறை மாவட்டத்தில் (யாழ் மறை மாவட்டத்தோடு இணைந்திருந்தபோது) குடியேறினார்கள். அம்மக்களை அருட்பணியாளர் J.B. தேவராஜா அடிகளார் பல கிராமங்களில் குடியேற்றி நிவாரணப்பணிகளில் ஈடுபட்டார். விடத்தல்தீவைச் சேர்ந்த இளம் பொதுநிலைப் பணியாளர்களாகிய திரு. அல்பேட், செல்விகள் அமலா, பெனிற்றா ஆகியோரும் அடிகளாரோடு சேர்ந்து கிராமம் கிராமமாகச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்கள். கல்வி கற்பித்தல், முதலுதவி, மருத்துவப் பணி, நற்செய்தி அறிவிப்புப்பணி ஆகியவற்றில் ஆர்வம் காட்டினார்கள்.


1978ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 20ம் நாள் இவர்கள் வாழ்வில் மறக்க முடியாத நன்நாள். அன்று இவர்கள் மூவரும் அருட்பணியாளர்கள் ஜெயசேகரம், தேவராஜா, ஜோய் பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் மடுத்திருப்பதியில் நற்கருணைநாதர் ஆலயத்தில் நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தில் தம் நற்செய்திப்பணி வாழ்வில் முதல் வாக்குத் தத்தத்தைச் செய்து தம்மை அர்ப்பணித்தார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை இவர்கள் தம் வாக்குத்தத்தத்தை புதுப்பித்து எத்தனையோ கஸ்ரங்கள், சமுதாய எதிர்ப்புக்கள் தடைகள், மனச்சோர்வுகள் வந்தபோதிலும் தாங்கள் இறைவனுக்கு கொடுத்த வாக்குறுதியை நினைவில்கொண்டு பணியாற்றி வருகின்றார்கள். இத்தனைக்கும் காரணம் இறைவனில் இவர்கள் கொண்டுள்ள விசுவாசமும் நம்பிக்கையுமாகும். ஆண்டவர் இவர்களோடுகூட இருந்து செயலாற்றுகின்றார். இவர்களைப் பராமரித்து வருகின்றார் - பாதுகாக்கின்றார். எந்தவித ஊதியமும் இன்றி பணியாற்றும் இவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் குழுவில் இவர்கள் முதலிடம் கொடுப்பது செபத்திற்கு. இவர்களின் அன்றாடச் செபம் உபவாசம், தியானங்கள் இவைதான் இவர்களைப் பலப்படுத்தி, இவர்களுக்கு வலுவூட்டி வந்திருகின்றன.

தேவாபுரம், செட்டிகுளம், பஸ்ரியன்புரம் சின்னக் கரிசல், தேவன்பிட்டி, கள்ளியடி, இலுப்பக்கடவை, கூராய், ஜெயபுரம், பள்ளிக்குடா, கவுதாரிமுனை, பூநகரி ஆகிய இடங்களில் இவர்கள் பணியாற்றி உள்ளனர்.

இறை - மனித பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற இவ்வேளையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் குருக்கள், இறைமக்கள் சார்பாக இவர்களை வாழ்த்துகிறோம். இவர்களின் அன்புப்பணிக்கு நன்றி கூறுகிறோம். இத்தனை ஆண்டுகளாக இவர்களைப் பாதுகாத்து பராமரித்து வழிநடத்தி வந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு இவ்வேளையில் புகழ்ச்சியோடு கூடிய நன்றியறிதலை கூறுவோம். எளிமை நிறைந்த தமது அன்பான பிரசன்னத்தினாலும் பணியினாலும் பல மக்களுக்கு வாழ்வு கொடுக்கும் இவர்களின் பணி இன்னும் பல்லாண்டுகள் தொடர இறையாசீர் வேண்டி மன்னா வாழ்த்துகிறது.

## மன்னார் மறைமாவட்டத்தின் முதல் பெண் துறவி
# சகோ. றெஜினா வைரவிழாக் காண்கிறார்



### வைர விழா நினைவலைகள்

அன்று 1936ம் ஆண்டு தலைமன்னார்க் கிராமத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணின் இதயக் கதவைத் தட்டினார் இறைவன். என்னைப் பின்செல் என்று கேட்டது ஓர் இதயஒலி. திகைத்தார்.... என்ன இது? துறவிகளின் காலடித்தடம் படாத ஒரு இடத்திலிருந்து ஓர் இறையழைப்பா? இருந்தும் துறவிகளின் கல்விச்சாலையில் பயின்றவள் என்றதினால் இறையழைப்பை இனம் கண்டுகொண்டாள். 1941ல் தனது ஆசிரியர் பயிற்சியை முடித்த இவர் திருக்குடும்ப நவத்துறவியர் இல்லம் சென்று துறவுவாழ்வை ஆரம்பித்து 1943 ஆடி 30இல் தனது முதல் அர்ப்பணத்தையும் 1948 மார்கழி 18ல் நித்திய அர்ப்பணத்தையும் செய்து ஒரு திருக்குடும்பத் துறவியானார். மருதமடுத்தாயே எனக்கு உண்மையாகவே இறையழைப்பு இருக்குமானால் அதை எனக்குக் காட்டு என உள்ளத்தில் வேண்டிக்கொண்டு தனது துறவறப்பெயர் எழுதிய காகிதத்துண்டை எடுத்து விரித்தபோது அவளுக்குத் தன் கண்களையே நம்ப முடியாதிருந்தது. காரணம் அவளுக்குக் கிடைத்தபெயர் மேரி றெஜினா. மரியன்னை தன்னை அவளது உடைமையாக்கிக் கொண்டாள் என்பதை உறுதிசெய்துகொண்டார்.

2003 ஆடி 30ம் நாள் மருதமடுத்திருப்பதி விழாக்கோலம் பூண்டிருந்தது. காரணம் அன்று ஆண்டவன் பாதத்தில் அமர்ந்திருந்த மரியாளைப் போன்றும் அவருக்காக ஓடி ஓடிப் பணிபுரிந்த மார்த்தாளைப் போன்றும் கடந்த 10 ஆண்டுகளாக மடு அன்னையின் திருப்பதியில் தங்கியிருந்து இறைவார்த்தையைத் தன்னுள்ளத்தில் கொண்டவளாகவும், பரபரப்பான பணிகளான ஆலய அலங்கரிப்பு, பீடத்திற்கான அலங்கார வேலைப்பாட்டுத் துணிகள், மடு அன்னைக்கான மாந்தைகள், திருப்பலிக்கான உடைகள் போன்றவற்றை விதம் விதமாகத் தைத்து வழிபாட்டை வளமாக்கல் போன்ற பணிகளில் ஈடுபடுவதன் மூலம் மரியன்னையின் புகழ் சாற்றிவரும் அருட்சகோதரி றெஜினாவின் துறவு வாழ்வின் 60 வருட நிறைவு விழா. ஆயர், அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள், உறவினர், நணபர்கள் புடைசூழ ஆயர் தலைமையில் மடு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் தமது மறை உரையில் அருட்சகோதரி றெஜினா மன்னார் மறைமாவட்டத்தின் முதல் பெண்துறவி என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அருட்சகோதரி றெஜினா அச்சுவேலி, பண்டத்தரிப்பு, மன்னார், முல்லைத்தீவு, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, மாதகல் ஆகிய இடங்களில் கல்விப் பணியாற்றிய பின்னர் 1975ம் ஆண்டு தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து மட்டக்கலை, நெடுந்தீவு, நாரந்தனை, பேசாலை ஆகிய இடங்களில் பல்வேறு பணிகளில் ஈடுபட்ட பின்னர் தற்பொழுது 10 ஆண்டுகளாக மடுத்திருப்பதியில் தனது பணியைத் தொடர்கின்றார்.

4.10.1919ல் பிறந்த இவர் இன்று தனது 84வது வயதிலும் இளைஞரைப்போன்று துடிப்புள்ளவராகவும், பணியார்வம் மிக்கவராகவும், நீதி, நேர்மைக்கு இலக்கணமானவராகவும், எந்தவித வீண்பேச்சுக்கும் இடம்கொடாதவராகவும் வாழ்ந்து வருகின்றார். இவர் தனது துறவு வாழ்வைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணமாயிருந்தது மாதா பக்தியும், நற்கருணைப் பக்தியுமே என்று கூறுகின்றார். அன்று துளிர்விட்ட இந்தப் பக்திகளெல்லாம் இன்று இவரை முழுமையாக ஆட்கொண்டுவிட்டன. இறைபதம் அமர்ந்து, இறைவார்த்தையை வாசித்துச் சிந்தித்து அதனை வாழ்வாக்குவதில் இவர் வல்லவர். இத்தகைய பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள சகோதரி றெஜினா தனது பவள விழா, நூற்றாண்டு விழா போன்றவற்றையும் கண்டுகளிக்க இறையாசீர் வேண்டுவோம்.

### புனிதர் பொன்மொழி

"நீ செபத்தை நிறுத்தி விட்டால் தண்ணீரிலிருந்து கரையில் வீசி எறியப்பட்ட மீனுக்கு ஒப்பாவாய் ."

- புனித ஜோண் கிறிஸ்தோத்தம்-

### புனிதர் பொன்மொழி

"என்னைப்பொறுத்த மட்டில் இதயம் இறைவனைத் தேடுவது செபம். விண்ணை நோக்கி நம் கண்களைத் திருப்புவது செபம். மகிழ்ச்சியோடு கூடிய அன்பான கூக்குரலே செபம்"

- குழந்தை யேசுவின் புனித சின்னத் திரேசம்மாள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுச் சங்கமம்

## வெரித்தாஸ் தமிழ்ப்பணியினருக்கு மன்னாரில் மகத்தான வரவேற்பு






நாதஸ்வர இசை முழங்க விழா மண்டபத்திற்கு வெரித்தாஸ் தமிழ்ப்பணிக் குழுவினர் அழைத்து வரப்படுகின்றனர்.



மண்டப வாயிலில் தமிழ்ப் பண்பாட்டின்படி ஆராத்தி எடுத்து பொட்டிட்டு வரவேற்கப்படுகின்றனர்




விருந்தினர்களையும் சபையோரையும் மகிழ்வித்த மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

## மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

### விவிலியப் போட்டி நிகழ்வு 2003

பணிவாழ்வு என்னும் தலைப்பின்கீழ் இவ்வாண்டுக்கான விவிலியப்போட்டி நிகழ்வுகள் பங்கு மட்டத்தில் இம்மாதம் (ஆவணி) 31ம் திகதிக்குமுன் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. மறைக்கோட்ட மட்டத்திலான போட்டிகள் செப்டம்பர் மாதம் 13, 14ம் திகதிகளில் நடைபெறும். இதுபற்றிய மேலதிக விபரங்கள் பங்குத் தந்தையர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும்.

### மறையாசிரியர் தேர்வு - 2003

புதிய பாடத்திட்டத்திற்கமைய தேர்வு - 1,2,3 ஆகியவற்றுக்கான புத்தகங்களை மறைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். மறையாசிரியர் தேர்வுக்கான ஆயத்த வகுப்புக்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இத்தேர்வுகள் கார்த்திகை 22ம் திகதி இடம் பெறும்.

### முன்னாள் மறைக்கல்வி இயக்குனருக்கு பாராட்டு விழாக்கள்



மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குனராக கடந்த ஐந்து வருடங்கள் அயராது பணியாற்றி பணிமாற்றம் பெற்று சென்றுள்ள அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ் அடிகளாருக்கு மறையாசிரியர்கள் தமது நன்றியை வெளிப்படுத்தினர். வவுனியா மறைக்கோட்ட மறையாசிரியர்கள் வவுனியாவில் ஒன்று கூடி பிரிவுபசார விழாவை நடாத்தினர். அதைத்தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெற்றது. 22.08.2003 அன்று மன்னார், முருங்கன், மடு மறைக்கோட்டங்களைச் சேர்ந்த மறையாசிரியர்கள் ஒன்றிணைந்து பாராட்டு விழாவை ஒழுங்குசெய்தனர். அன்றைய தினம் இராப்போசனமும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புதிய மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளாரும், புதிய அன்பிய இயக்குனர் யூட் குரூஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

### விடத்தல் தீவு புனித யாகப்பர் ஆலயத்திருவிழா

விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலயத்திருவிழா வழமைபோல ஆடிமாதம் 16ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. பங்குத் தந்தை அருட்பணியாளர் எஸ். மரியதாஸ் லியோன் அடிகள் தலைமையில் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் பி.ஜேக்கப் யோகராஜா அடிகள் புனிதரின் கொடியை ஏற்றிவைத்து, தினமும் திருப்பலி, வழிபாடுகள், கருத்தரங்குகளை நடாத்தி இறைமக்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்தினார்.

அவர் தமது ஆரம்ப மறை உரையில் இத்திருநாள் காலம் இறைவன் நம்மைத் தேடிவந்து சந்திக்கிற புனிதமான காலம் இறைவனை விட்டு தூர விலகி வாழ்ந்தோர் இறைவனைத் தேடிவந்து தங்கள் அழைப்பின் மேன்மையைப் புதுப்பித்து மனமாற்றமடைய ஏற்ற காலமாயிருக்கிறது என்று கூறினார். ஒவ்வொரு தினத்தையும் மாணவர், இளைஞர், பெற்றோர் அன்பிய ஊக்குவிப்பாளர், பக்திச் சபையினர், பொதுநிலையினர் ஆகியோர் சிறப்பித்தனர். மக்கள் தங்களை அர்ப்பணம் செய்து புதுவாழ்வு பெற அடிகளார் வழிநடத்தியது ஆன்மீக வாழ்வில் ஒரு சிறப்பம்சமாக இருந்தது.


தகவல்: P. இராயப்பு, இளைப்பாறிய ஆசிரியர், விடத்தல்தீவு.

## பங்குத் தள சங்கதிகள் பங்குத் தள சங்கதிகள்

### மூன்றாம்பிட்டியில் புனித அந்தோனியார் திருவிழாவும் திறப்பு விழாவும

தேவன்பிட்டிப் பங்கின் துணைப்பங்கான மூன்றாம் பிட்டியில் புனித அந்தோனியார் ஆலயம் பழமை வாய்ந்ததும் மிகவும் சிறிய ஆலயமுமாக இருந்ததனால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டது. இவ்வாலயத்திற்கு முன்னாள் பங்குத் தந்தை அருட்திரு அ. சகாயநாதன் அடிகளார் அடிக்கல் நட்டார். இவரைத் தொடர்ந்து பங்கை பொறுப்பேற்ற அருட்தந்தை நீ. பாக்கிய றஞ்சித் அடிகளாரால் ஆலயம் வெகுவிரைவில் கட்டியெழுப்பப்பட்டது. 13.07.2003 அன்று ஞாயிறு காலை 7.00 மணியளவில் மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களால் சம்பிரதாயபூர்வமாக இவ்வாலயம் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டதுடன் திருவிழாத் திருப்பலியையும் எமது பங்குத் தந்தையுடன் இணைந்து மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றினார்.

### சிறு நீலா சேனை சிதைந்த ஆலயத்தில் திருவிழா



சேதமாக்கப்பட்ட நிலையில் சிறு நீலாசனை யாகப்பர் தேவாலையம்

சிறு நீலா சேனை கிராமம் யுத்த சூழ்நிலையில் அழிவுக்குள்ளான ஒரு கிராமம். ஆலயம் தொடக்கம் சகல வீடுகளும் அழிக்கப்பட்டு காடாக இருந்த நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு 2001/2002 காலப்பகுதியில் காலபோக வேளாண்மை செய்ய மக்கள் சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டது. இன்நிலையில் சிரமதானம் மூலம் கோவில் இருந்த இடம் துப்பரவு செய்யப்பட்டு 02.08.2003 காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலி பங்குத்தந்தை அருட்திரு வசந்தகுமார் அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. தற்போது அங்குள்ள குளத்து நீரைக்கொண்டு மக்கள் தங்களது முயற்சியினால் 50 ஏக்கர் வரை இடைப்போகம் செய்து விளையும் தருவாயில் உள்ளது. அங்கு மக்களை மீளக் குடியமர்த்துவதில் தாமதங்கள் ஏற்பட்டு வருவதால் உடைந்து போயுள்ள புனித யாகப்பர் ஆலயத்தை தற்காலிகமாகவாவது கட்ட வேண்டும் என்ற நிலையில் நிதி வழியில்லாது பல்வேறுபட்ட வழிகளில் நிதியினை சேகரிக்க தீர்மானித்துள்ளார்கள். மேலே உள்ள சிதைந்த ஆலயத்தில் இவ்வருடம் திருவிழா கொண்டாடப்பட்டது,

### துவரங்கேணி புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா

உயிலங்குளம் பங்கில் கானகத்தால் சூளப்பட்ட துவரங்கேணி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா வருடா வருடம் ஆனி - 13ந் திகதி வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சாதி இனபேதமின்றி பக்தர் தொகை இப்புனிதருக்கு கிடைக்கிறது. 11ந் திகதி புனிதரின் கொடியை ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார் உயிலங்குளம் பங்குத் தந்தை றெஜினோல்ட் அடிகளார். ஆயத்த நாள் வழிபாடுகள் உட்பட 13ந் திகதி திருநாள் திருப்பலியை அடிகளார் வெகு பக்தி விமரிசையாக நடாத்தி வைத்தார்.

தீ. இசிதோர், ஆலய செயலாளர்

### வஞ்சியன் குளத்தில் பல தினங்கள

வஞ்சியன் குளத்தில் ஆனி மாதம் பீடப்பணியாளர்களின் திருவிழாவும், அன்பிய விழா, திருத்தந்தை தினமும் சிறப்பு திருப்பலியும் அத்துடன் பகிர்வும் சிறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அருட்தந்தை அருள்பிரகாசம் தலைமையில் ஊக்குனர்களின் ஒத்துழைப்படன் இவை சிறப்பாக நடந்தேறின

சீ. சந்தியோகு ஜெயந்தன், வஞ்சியன் குளம்

### புனித இராயப்பர் நாட்டுக்கூத்து நாடகம்

வஞ்சியன்குளம் புனித இராயப்பர் ஆலயத்திருவிழாவை முன்னிட்டு சித்தவைத்தியர், புலவர், (சமாதான நீதவான்) அந்தோனி சீமான் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு ஊர்மக்கள் ஒற்றுமையுடன் இணைந்து நடித்த புனித இராயப்பரின் பணியடங்கிய இரண்டு நாள் (இரவு) நாட்டுக்கூத்து 2.08.2003 தொடக்கம் 3.08.2003 அன்று வரையும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான விருந்தினரும் ஆயிரக்கணக்கான மக்களும் கலந்துகொண்டனர். இந் நிகழ்விற்கு பங்குத் தந்தை அருள்ப்பிரகாசம் அவர்கள் அயராது தோளோடு தோள்நின்று உழைத்தார்.

### தலைமன்னாரில் போல் றொபின்சன் அடிகளார்

தலைமன்னார்ப் பங்கின் பாதுகாவலரான புனித லோறன்சியார் திருவிழாவானது 01.08.2003ந் திகதி பங்குத் தந்தை அந்தோனிதாஸ் டலிமா அவர்களின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்களாக திருவிழா ஆயத்த வழிபாடுகள் இடம் பெற்றது. ஆயத்த வழிபாடுகளை அருட்தந்தையர்கள் விக்டர் சோசை, ஜெயபாலன், ஸ்ரீபன் ஜெயசீலன், ஆகியோர் நடாத்தினர். இதில் சிறப்பாக 3ம் 4ம் திகதிகள் அருள் மழைபொழியும் குணமாக்கும் வழிபாடு நடைபெற்றது. இரு தின வழிபாடுகளையும் மட்டக்களப்பில் உள்ள தேத்தாத்தீவின் அருட்தந்தை போல் றொபின்சன் அவர்கள் நடாத்தினார். அந்த நாட்களில் பல இடங்களிலிருந்து மக்கள் திரள் திரளாக வந்து ஆசீர் பெற்றனர். பல புதுமைகள் இடம்பெற்றது. இறுதியில் சாட்சிய பகிர்வு நடைபெற்றது. 09.08.2003 அன்று நற்கருணை ஆரதனை இடம்பெற்றது. 10.08.2003 அன்று திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சி. ஜென்சி குரூஸ், தலைமன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## ஊருடன் கூடி வாழ்!
## சிறுவர் சிந்தனைக் கதை




அந்த அடர்ந்த காட்டிலே பயங்கர மிருகங்களுடன் விதவிதமான பறவைகள் வசித்து வந்தன. அந்தப் பறவைகள் எல்லாம் தங்கள் இனம், நிறம், குரல் ஆகியவற்றை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன. ஆனால் அங்கு வசித்த கிளி ஒன்றும் குயில் ஒன்றும் காட்டில் இருந்த ஏனைய பறவை இனங்களோடு சேர்வது கிடையாது. உலகிலேயே உயர்வானவன் மனிதன். அந்த மனிதனைப்போல் தன்னால் பேச முடியும் என்ற கர்வம் கிளிக்கு. மனிதனே தன் குரல் இனிமையைப் பாராட்டிப் பேசுகிறான் என்ற கர்வம் குயிலுக்கு இருந்தது. இதனால் கிளியும் குயிலும் ஏனைய பறவைகளை விடத் தாம்தான் உயர்ந்தவை என்று நினைத்துக் கொண்டிருந்தன. கிளி ஏதாவது மரப்பொந்துகளில் வசிக்கும். குயில் ஏதாவது மரக்கிளைகளில் இருக்கும். ஏனைய பறவைகள் இவற்றிடம் எங்காவது கூடு கட்டி வாழும்படி கூறின. ஆனால் அதனை இவையிரண்டும் கேட்பதில்லை. கிளி எப்போதும் மனிதர் பேசுவதுபோலப் பேசிக்கொண்டிரும் குயிலோ எப்போதும் இனிமையாகக் கூவிக்கொண்டிருக்கும் ஊருடன் கூடிவாழ் என்பது முதியோர் வாக்கு. இதனை இரண்டு பறவைகளும் மதிக்கவில்லை. தவறு செய்தால் தண்டனை கிடைக்குமல்லவா? இவற்றிற்கு ஒரு வேடன் வடிவிலே ஆபத்து வந்தது. அந்தக் காட்டிற்கு வேடன் ஒருவன் வந்தான். அப்போது அவனுக்கு கிளி பேசும் பேச்சும் குயில் கூவும் ஓசையும் கேட்டது. இவை இரண்டையும் தன் இருப்பிடத்திற்குக் கொண்டு செல்ல விரும்பினான். வேடன் கிளியும், குயிலும் தனியாக இருந்ததால் இவற்றைப் பிடிக்க அதிகம் சிரமப்படத் தேவையில்லை என்று நினைத்தான். மறு நிமிடமே வலையைத் தயார் செய்து இரண்டையும் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டான். மற்றப் பறவைகளின் சொற்கேளாமல் அவைகளோடு கூடி வாழாமல் இருந்ததால் கிளியும், குயிலும் வேடனிடம் இலகுவாக அகப்பட்டுக்கொண்டன.

வி. அன்ரன் குமார், தரம்:- 10, மன். புனித லோறன்ஸ், றோ. க. த. க. பாடசாலை, தலைமன்னார்.


## புனிதர் என்றால் யார் தெரியுமா? புனிதர் என்றால் யார் தெரியுமா?



அக்கம் பக்க உதைப்புக்களை ஜீரணிக்கக் கூடியவர்கள்



எதிர்பாராத சூழலில் தம்மை வெளிக்கொணர்வர்



மறைவிடங்களில் தஞ்சம் புகுபவர்கள் அல்லர்



அமைதியாக இருப்பது அவருக்குக் கடினமல்ல.

## சிறுவர் தொடர் கதை

### சிவந்த மணல்

அங்கம் 11

*புனித அருளானந்தர்*



41. வேள்வித் தீ மூட்டப்பட்டுவிட்டால், அதன் விளைவுகளும் சாதாரணமானவைகளாக இருக்க முடியாதே! தடியத் தேவர் திருமுழுக்குப்பெற தடையாக இருந்தது அவருக்கு மனைவியர் ஐவர் என்ற நிலை. கிறிஸ்துவ முறைப்படி "ஒருவருக்கு ஒருத்தி" என்ற நிலைதானே. இது கண்டு தடியத்தேவரே முன்வந்து "தன் முதல் மனைவியை மட்டும் தன்னோடு இருக்கட்டும், மற்ற நால்வரையும் தனது சகோதரிகளாகப் பாவித்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளை நான் செய்து கொடுக்கிறேன்" என உறுதிமொழி கொடுக்கிறார். ஆம், தடியத்தேவர் விரும்புவதெல்லாம் திருமுழுக்கின் மூலம் மெய்மறையில் சேருதல். வேள்வித் தீயின் வெப்பம் பரவ ஆரம்பித்துவிட்டது!

42. வெப்பம் என்றாலே சுடுமல்லவா! அதுவும் இது சாதரண வெப்பமா! விசுவாச வேள்வித் தீயல்லவா மூட்டப்பட்டுவிட்டது. இதோ அதன் விளைவு. தடியத்தேவரின் முடிவைக் கேட்ட, மற்ற நான்கு மனைவியரும் இம்முடிவை ஏற்கத் தயாராக இல்லை. இவர்களில் ஒரு மனைவியின் பெயர் "கடலாயி" என்பது. இவள் சேதுபதி மன்னரின் தங்கை மகளும்கூட. எனவே தனது மாமனிடம் சென்று பழிவாங்கப் போவதாகப் பயமுறுத்தினாள். இதன் காரணமாக சேதுபதி மன்னர் தன்னைக் கொல்லவும் செய்வார் என்ற ஒரு நிலை இருந்தாலும், தடியத்தேவர் அதற்கு இணங்க மறுத்தார். ஒருவருக்கு ஒருத்தி என்ற நிலையை ஏற்று, திருமறையில் சேரவும் துணிவு கொள்கிறார்.

43. வேள்வித் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்து விட்டது! ஆம், கடலாயி தன் மாமன் சேதுபதியைச் சந்தித்து தன் நிலைகூறி, அந்த சந்நியாசியை ஒழித்துக் கட்டாவிட்டால், விரைவில் அனைவரும் புதுமறையைத் தழுவுவர் என்றெல்லாம் கதறி அழுகிறாள். இதனால் கோபம் கொண்ட சேதுபதி மன்னன் முதலில் தடியத் தேவரை அழைத்து விசாரிக்கின்றார். தன் நோய் குணமானதையெல்லாம் எடுத்துச் சொல்கின்றார் தடியத்தேவர். ஆனால் இதையெல்லாம் சேதுபதி சரியாகப் புரிந்துகொள்ளாது, புதுமறையிலும் ஐந்து மனைவியரோடு தடியத்தேவர் வாழ்ந்திருக்கலாமே என எண்ணி இருக்கலாம்.

44. நம் புனிதரின் போதனையால் மனம் மாறி மெய்மறை தழுவ இருந்த தடியத்தேவர் தன் முதல் மனைவியோடு மட்டும் வாழவும், மற்ற நால்வருக்கும் மண முறிவும் கொடுத்துவிட்டார். குறிப்பாக தன் தங்கை மகள் கடலாயிக்கு மணமுறிவை தடியத்தேவர் அளித்ததை சேதுபதி மன்னனால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே தனது படைத்தலைவரும், தனது மூத்த சகோதரருமான திருவுரஞ்சத்தேவரை அழைத்து நமது புனிதரையும், அவரது உபதேசிமார்களையும் சிறைப்பிடித்து வரவும், முனியூர், கண்ணப்பன் கோட்டை, பொன்னாங்குடி, குருத்தங்குடி என்ற ஊர்களில் அவரால் கட்டப்பட்ட ஆலயங்களை இடிக்குமாறும் உத்தரவு இட்டான்.

(தொடரும்)

## கவிதைப் பூக்கள்

### சிறுவர் நாங்கள்

சிறுவர் நாங்கள் மலர்கள் போலச்
சிரித்து மலர வேண்டும்
நறுமணமாய் இனிய சொல்லை
நாளும் பேச வேண்டும்
எண்ணும் எழுத்தும் எங்கள் வாழ்வில்
இரண்டு கண்களாகும்
உண்மை எமது உயர்ந்த செல்வம்
ஒழுக்கம் எங்கள் உயிராம்
சின்ன யேசு உலகில் வாழ்ந்த
சிறந்த வாழக்கை போன்று
அன்னை தந்தை தெய்வம் என்று
அடி பணிந்து வாழ்வோம்.

சு. கீத் றெக்சன், பிச்சகுளம், முருங்கன்.

### உண்மையின் தீபம்

மனித நெஞ்சங்களே
நம் மனிதப் பண்பதனை
பாரினிலே பரைசாற்றிட
உதவும் அன்பதனை
இதயம் என்னும்
சிற்றறையில் தீபமாய்
ஏற்றிடுவோம்.
பிறர் வாழ்விலே உள்ள
நற் பண்பதனை
வெளிப்படுத்துவோம்.
பாரினிலே வாழ்கின்ற
மனித குலத்திற்கு
நன்மைகள் பல செய்வோம்.
உண்மையின் தீபமாய்
ஊரிலே வாழ உயிர்த் துடிப்புடன்
செயல்படுவோம்.

நேசராசா வினோத் குமார், பனங்கட்டிக் கொட்டு மேற்கு, மன்னார்.

### அன்பு

அன்பு சினம் கொள்ளாது
அன்பு பொறாமை கொள்ளாது
அன்பு கலக்கம் இல்லாதது
அன்பு ஆழம் உள்ளது.
அன்பு அழுக்காறு கொள்ளாதது
அன்பு விலை மதிப்பற்றது
அன்பு நிறம் மணம் கொள்ளாதது
அன்பு கள்ளம் கபடம் அற்றது
அன்பு நட்புக் கொள்வது
அன்பு கோபம் கொள்ளாதது
அன்பு நீடித்து நிலைக்கும்.
அன்பு மூன்று எழுத்து உடையது.

ம. சுகிர்தா, தரம் - 9, வட்டாரம் - 8, பேசாலை

## சிரிக்க நீங்க ரெடியா?

### இயேசு கடல் மேல் ஏன் நடந்தார்?

ஒரு இந்தியர் புண்ணிய பூமியான பாலஸ்தீனத்திற்குச் சென்றார். அவர் கலிலேயா கடலில் படகில் செல்ல விரும்பினார். படகுக் காரருக்கும் அவருக்கும் நடந்த உரையாடல் இது.
இந்தியர்:- ஐயா படகிற்கு என்ன கூலி வேண்டும்?
படகுக்காரர்:- 300 ரூபா ஐயா
இந்தியர்:- அடேயப்பா எங்க நாட்டிலே வெறும் 100 ரூபாதான்டா அதாலேதான் யேசு படகுக் கூலியை பார்த்து கடல்மேல் நடந்தே சென்றிருக்கின்றார்....!

......................

ஆசிரியர்:- ஏண்டா குமார் ஆறு ஆண்டுகளாக எங்கே போயிருந்தாய்? இப்போது அன்னிய நாட்டு பெண்ணை கூட்டிக்கிட்டு வந்திருக்கிறியாமே இந்திய பெண் கிடையாமலா?
மாணவன்:- சார் பள்ளியில் படிக்கும்போது இந்தியா என் தாய்நாடு, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தோர் என்று தேசிய கொடி ஏற்றும் பொழுதெல்லாம் உறுதிமொழி கொடுத்திருக்கிறேன். அதை மீறலாமா சார்...

*டயானி , டெனோஸ், புதுக்கமம், உயிலங்குளம்.*

### உன்னைத் தவிர

நோயாளி:- டாக்டர் நீங்க கிளினிக் ஆரம்பிச்சதிலிருந்து வேறு யாரிடமும் மருந்திற்கு போனதில்லை
டாக்டர்:- அப்பிடித்தாய்யா எனக்கும் கிளினிக் ஆரம்பிச்சதிலிருந்து உன்ன தவிர யாரும் என்னட்ட மருந்துக்கு வந்ததே இல்ல.

......................

நீதிபதி:- ஏய்யா கொலை செய்தது இல்லாம அந்த பிணத்த சிவரோட சாத்தி கட்டி வைச்சிக்கிறா.
குற்றவாளி:- நா எஜமான் சொன்ன வாக்க தவறமாட்டேய்யா
நீதிபதி:- அப்பிடி என்ன சொன்னாரு?
குற்றவாளி:- ஆத்திரதீர அவனுக்கு சாத்தி தீத்துகட்டிற்று வா என்று சொன்னாரு.

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

### ஏன் செருப்பு மாட்டிக்கிட்டு தூங்கிறார்?

அருள்:- "உங்க அண்ணன் எதுக்கு செருப்பு மாட்டிக்கிட்டு தூங்கிறார்?"
ஜெகா:- "அவருக்குத் தூக்கத்தில நடக்கிற வியாதி இருக்காம்.......!"

......................

நிரோஷா:- "செருப்பு காலைக் கடிக்காமல் இருக்க என்ன செய்யணும்?"
நிருஷா:- "பல் இல்லாத செருப்பா பார்த்து வாங்கணும்!"

......................

ஆசிரியர்:- ஏண்டா நாலையும், மூன்றையும் கூட்டிப் பதில் சொல்லத் தெரியலையா?
மாணவன்:- தெரியும் சார்
ஆசிரியர்:- அப்ப ஏண்டா சொல்லேல்ல?
மாணவன்:- நீங்கதானே சொன்னீங்க இதெல்லாம் மனக் கணக்குன்னு. அதனால மனசுக்குள்ளேயே சொல்லிக்கிறேன்.

*யே. மொறின் சிந்துஜா, கன்னாட்டி, அடம்பன்.*

### உங்களை மாதிரியே இருக்கு .....

காதலன்:- நான் வாங்கிக் கொடுத்த புது சட்டை எப்படி இருக்கு?
காதலி:- உங்களை மாதிரியே இருக்கு.
காதலன்: என்னை மாதிரியா? எப்படி?
காதலி:- லூசா இருக்கு.

......................

காதலன்:- அடுத்த ஜென்மத்தில் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன் கீதா
காதலி:- அடுத்த ஜென்மத்தில எனக்கு நம்பிக்கை இல்லங்க
காதலன்:- எனக்கும் நம்பிக்கை இல்ல அந்த தைரியத்தில தான் சொல்றன்

அ. சிறோமி குருஸ், 4ம் வட்டாரம், பேசாலை.

### எப்ப சுதந்திர தினம்?

ஒருவர்:- கல்யாணத்தின் பின்னரும் உங்க மகன் ஊர் சுற்றுகின்றானா?
மற்றவர்:- இல்ல அவன் பொண்டாட்டியை சுத்திவாரன்

அம்மா:- ஏன்டா கையில ஒரு விளக்கோடு ஒரு பெண்ணை கூட்டி வந்திருக்கே?
மகன்:- நீ தானேம்மா சொன்னே வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பெண் வேணும்னு...

நண்பன்:- எப்படா சுதந்திர தினம்?
மற்ற நண்பன்:- நீ எப்ப இந்த உலகத்த விட்டு போறியோ அப்பதான் எனக்கு சுகந்திர தினம்டா.


*ப. கிளமன் பறுனாந்து, தரம் - 08, அன்ரனிஸ் வீதி, பேசாலை.*

### வாயைத் திறந்துதான் பேசுவாங்க...

தகப்பன்:- விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் இருக்கும் மகனை பார்க்க வந்த தகப்பன் என் மகன் எப்ப கண்ணை திறந்து பேசுவான் டாக்டர்?
டாக்டர்:- எல்லோரும் வாயை திறந்துதான் பேசுவாங்க கண்ணை திறந்து பேச மாட்டாங்க.

*ஜெ. சுமணா பிகிறாடோ, 2ம் வட்டாரம், பள்ளிமுனை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்வு தரும் வார்த்தை

# நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்



சகோதரர் அ. இருதயசாமி
ஆசிரியர், 'தூய ஆவியில் புதுவாழ்வு' சஞ்சிகை

கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் எப்படி இருக்க வேண்டும், ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நமக்கு அருளும் ஆசீரைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்று புனித பவுல் கொலோ 3:12ல் கூறுகின்றார். நீங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்று பவுல் குறிப்பிடுகின்றார். இவ்வுலக மனிதர்களால் அல்ல, அழிந்து போகின்ற செல்வங்களால் அல்ல மாறாக உயிருள்ள கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள். எனவே நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அன்பு மக்கள். அதற்கு ஏற்ப பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் நம்மை அணி செய்துகொள்ள வேண்டும் என்று ஆலோசனை கொடுக்கிறார்.

### நீங்கள் கிறிஸ்துவினால் தேர்ந்து கொள்ளப்பட்ட இனம்

எனவே கிறிஸ்தவ வாழ்வு என்பது தேர்ந்து கொள்ளப்பட்ட வாழ்வு, இதைப் படித்துக்கொண்டிருக்கிற பிரியமானவர்களே, தேர்ந்து எடுக்கப்பட்ட மக்கள் என்பது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி, இறைமக்கள் என்பவர்கள் யார்? கடவுளின் மக்கள். திருச்சபை என்றால் என்ன? இறைமக்களின் திருக்கூட்டம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பல ஆயிரம் மக்கள் இருக்க இயேசுகிறிஸ்து 12 பேரை மட்டும் தெரிந்து எடுத்தார். ஏனெனில் தம்மோடு இருக்கவும், நற்செய்தி அறிவிக்கவும், அதிகாரத்தோடு பேய்களை ஓட்டவும், நோய்களைக் குணமாக்கவும், விண்ணக அதிகாரத்தைக் கொடுக்கவும் இந்த 12 பேரைத் தேர்ந்து எடுத்தார்.

புனித பேதுரு சொல்கிறார் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அரச குருக்களின் கூட்டத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள் (1 பேதுரு 2:9) அப்படியென்றால் ஒரு கிறிஸ்தவன் முதலாவது உணர்ந்துகொள்ள வேண்டிய மாபெரும் உண்மை உண்டு. "என் தாத்தா கிறிஸ்தவராக இருந்தார் ஆகவே எனது அப்பா கிறிஸ்தவராக இருக்கிறார். ஆகவே அவர் மூலமாகவே வந்த நானும் கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக இருக்கிறேன். பரம்பரை, பரம்பரையாக கிறிஸ்தவர்களாக இருக்கிறோம்" என்பதைக் குறித்து பெருமை பாராட்ட இங்கு இடம் இல்லை. இன்று நீ யாராக இருந்தாலும் உயிரோடு இருக்கிற மீட்பர் உன்னைத் தேர்ந்து எடுத்திருக்கின்றார். பலகோடி மக்களுக்குள் உன்னையும் தேர்ந்து எடுத்திருக்கின்றார் என்றால் அவருக்கு உன்னைக் குறித்து ஒரு திட்டம் உண்டு. ஒரு நோக்கம் உண்டு. அதற்கு ஒரு காரணம் உண்டு.

சாதாரணமாக நாம் நினைத்த இந்த வாழ்வை நாம் இழந்து போய்விடக்கூடாது. நாம் இறைவனால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள். எனவே எனது முன்னோர்களாகிய தாத்தா செய்த புண்ணியத்தினால் அல்ல, பெற்றோர் செய்த புண்ணியத்தினாலும் அல்ல, ஏதோ கொள்கைக்காகவோ, எதிர்ப்பார்ப்புக்காகவோ, சுயலாபத்திற்காகவோ, கிறிஸ்துவை நான் தேர்ந்து எடுக்கவில்லை. என்னை அவர்தாமே தெரிந்து எடுத்துள்ளார் என்ற ஆழமான உண்மையை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டுள்ளேன் என்பதை யோவான் 15:16ல் வாசிக்கின்றோம். நம் ஆண்டவரது தேர்வு சற்று வித்தியாசமானதுதான்.

### கிறிஸ்துவினால் தேர்வு செய்யப்பட்டதற்கு அவரிடம் ஒரு திட்டம் உண்டு

ஆம் பிரியமானவர்களே, கடவுளது தேர்வு தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே - ஏன் இந்த உலகம் உருவாகும் முன்னே நடந்தேறியிருக்கின்றது. நீ உன் தாயின் கருவில் உருவாகும் முன்னே உன்னைக் குறித்து அவருக்கு ஒரு திட்டம் இருந்தது. எனவே இறைவன் என்னையும் தெரிந்து எடுத்துள்ளார் என்ற உண்மையை அறிந்திருக்க வேண்டும். நாம் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறோம் என்பதைப்பற்றி அல்ல இறைவனுடைய இரக்கம், பரிவு நம்மைத் தேர்ந்து எடுத்திருக்கின்றது. பல்லாயிரம் மக்கள் இருந்தாலும் ஆபிராமை ஆண்டவர் தேர்ந்து எடுத்து ஆபிரகாமாக மாற்றுவதைக் காண்கிறோம். இவ்வுலகில் எத்தனை ஆயிரம் மக்கள் இருந்தார்கள், ஆனால் தம் மீட்பரை அனுப்ப வேண்டும் என்பதற்காக ஒரு புதிய இஸ்ரயேலைத் தேர்ந்தெடுத்து ஆபிரகாமை நோக்கி கடவுள் "ஆபிரகாம், ஆபிரகாம் நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்கு செல். உன்னைப் பெரிய இனமாகப் பெருகச் செய்வேன். உன் வழியாக இம் மண்ணுலகம் ஆசீர்வதிக்கப்படும்" என்றார். ஆபிரகாமைத் தேர்ந்தெடுக்க ஒரு திட்டம் இருந்தது. அதை நிறைவேற்றிக் காட்டின ஆண்டவர் நீ இருக்கும் பகுதியிலும், உங்கள் ஊரிலும் உன்னைத் தேர்தெடுத்திருக்கிறார் என்றால் உன்னைக் குறித்து அவருக்கு ஒரு திட்டம் உண்டு. அதை நிச்சயமாக நிறைவுசெய்வார்.

1சாமு 16:1-6 ல் பார்க்கிறோம் சவுலை அரச பதவியிலிருந்து நீக்கப் போகின்றேன். ஆகவே ஈசாயின் புதல்வர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கப் போ என்று ஆண்டவர் சாமுவேலிடம் கூறுகிறார். ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பயந்த நிலையில் அங்கு செல்கிறார் அங்கு நடப்பது என்ன? ஈசாய் தனது புதல்வர்கள் ஒருவர் ஒருவராய் அழைக்கிறார். ஒருவன் வாட்டசாட்டமாய் இருப்பதைப் பார்த்து ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் இவனாகத்தான் இருக்கவேண்டும் என்று சாமுவேல் எணணும்போது ஆண்டவர் "மனிதனோ வெளித்தோற்றத்தைப் பார்க்கிறான். நானோ உள்ளத்தைப் பார்க்கிறேன்" என்றார். ஈசாய் கொண்டுவந்து நிறுத்தியவர்களில் ஒருவனும் இல்லை என்றவுடன் உன் பிள்ளைகள் இத்தனைப் பேர்தானா? என்று கேட்க "இல்லை ஐயா, இன்னும் ஒரு சிறுவன் இருக்கிறான் அவன் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கிறான்" என்றவுடன் "அவனை அழைத்துக் கொண்டுவா" என்று சொன்னார் சாமுவேல் முன் அவன் அழைத்து வரப்பட்டான். சிறுவனாகவும் அழகிய தோற்றம் உடையவனாகவும் காணப்பட்டான். ஆண்டவரது கரம் அவனோடு இருந்தது. எனவே அபிசேகிக்கப்பட்டான். அப்படியாக சாமுவேல் வழியாகத் தாவீது அபிசேகிக்கப்பட்டானாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆகவே ஒரு கிறிஸ்தவ வாழ்வு என்பது ஆண்டவர் தேர்ந்தெடுத்தது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். திருமுழுக்கின் மூலமாக நீங்கள் மீட்க்கப்பட்டு திருச்சபையின் மக்களாக மாறி இருக்கலாம், அல்லது தோமையார் காலத்திலிருந்தே நாங்கள் கிறிஸ்தவர்கள் என்றும் பரம்பரைக் கிறிஸ்தவர்கள் என்றும் பெருமை பாராட்டிக்கொண்டு திட்டம் இல்லாமல் ஆண்டவரது தேர்வு இல்லாமல் ஆண்டவரது பெயரை உச்சரிக்கிற ஒருதிருக்கூட்டத்தில் இருக்க முடியாது. இதைத்தான் புனித பவுல் கோலோசை நகர் பட்டண மக்களுக்கு, என் அன்புக்குரிய மக்களே, நீங்கள் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்கிறார். அப்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவிக்குரிய வாழ்வு வாழவேண்டும். என்று கிறிஸ்தவம் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கின்றது.

### கிறிஸ்தவ வாழ்வில் உனது அணிகலன் என்ன?

எனவே நீங்கள் அதற்கேற்ப பரிவு, இரக்கம். நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய் பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஆவிக்குரிய செயல்களாலே ஒரு கிறிஸ்தவன் தன்னைத்தானே அணி செய்துகொள்ள வேண்டும். எனவே கிறிஸ்தவ வாழ்வு என்பது முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்வு, இரண்டாவது ஆவிக்குரிய வாழ்வு. தூய ஆவியின் கனிகளோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவையாகும். (கலா 5: 22) இவைகளால் உங்களை அணி செய்துகொள்ளுங்கள் என்று விவிலியம் கற்றுக்கொடுக்கின்றது.

ஆனால் நாம் இன்றைக்கு எப்பேர்ப்பட்ட அணிகளன்களால் நம்மை அலங்காரம் செய்துகொண்டிருக்கின்றோம்?

எமது உடலையும், ஆத்துமாவையும் குறித்து சிந்தித்துப் பார்ப்போம். ஒரு சகோதரி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருந்தபோது "எனது மாமியார் விவிலியத்தை எடுக்கிறார்கள் கோவிலுக்குத் தவறாமல் போகின்றார்கள். எதற்காகப் போகிறார்கள்? தன்னிடமுள்ள பல ஆயிரம் மதிப்புள்ள சேலைகளைக் காட்டவும், பீரோவிலுள்ள தங்க நகைகளை அணிந்து தனது ஆடம்பர வாழ்வை வெளிக்காட்டவுமே போய் வருகிறாள். தன் வாழ்வில் ஆவியானவரின் அணிகலன்களை அணியவுமில்லை, பெற்றுக்கொள்ள விரும்பவுமில்லை" என்றார்கள்.

அதுபோலவே நாமும் திருச்சபையில் கோவிலுக்கும், நற்செய்திக் கூட்டங்களுக்கும், பகட்டான ஆடையைக்காட்டவும், நேரப்போக்கிற்காகவும் செல்கிறோமா? அல்லது ஆண்டவரைக் காணப்போகிறோமா? அன்பு, அமைதி, மகிழ்ச்சி, பொறுமை, நல்லெண்ணம், பரிவு, நம்பிக்கை இவைகளை விட்டுவிட்டு நாம் வாழ்வோம் என்றால் நம்மைபோல் இரங்கத்தக்கவர் யாரும் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்க்கை ஆவிக்குரிய வாழ்க்கையாக இருக்க வேண்டும்.

அன்று தொடக்கச் திருச்சபையில் துன்பம் வந்தபோது என்ன செய்தார்கள் என்றால் எல்லோரும் ஒன்று கூடி மன்றாடினார்கள். அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. பிரியமானவர்களே, ஆதித்திருச்சபையில் மட்டும்தான் கூடிச்செபிக்கும்போது இடம் அதிருமா? இப்போது அதிராதா? சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்துவுக்குள் நம் உள்ளங்கள் அதிர வேண்டும். அப்போது நாம் கூடிச் செபிக்கும் இடமும் அதிரும். எதிர்ப்புகள் வந்தால் என்ன? கலாபனைகள் வந்தால் என்ன? பிரச்சினைகள் வந்தால் என்ன? ஒரு கிறிஸ்தவன் எதிர்ப்புக்களைக் கண்டோ, கலாபனைகளைக் கண்டோ, பிரச்சனைகளைக் கண்டோ, பயந்து ஓடியதில்லை. துணிவுடன் இருந்தார்கள். இதற்குக் காரணம் நம் இரட்சகர் இயேசு எதைக் கண்டும் கலங்காமல் சிலுவையைக் கண்டு ஒதுங்கிச் செல்லாமல் அதைத்தானே சுமந்து நிறைவேற்றினார். கலாபனைகளை கண்டு உலக சட்டதிட்டங்களைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ளத் தேவையில்லை.

### ஆவிக்குரிய வாழ்வு நம்மை வழிநடத்தும்

ஏனெனில் நாம் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். இயேசுவின் ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள். நமது வாழ்வில் எல்லா செல்வங்களும் நிறைந்து இருக்கலாம். அல்லது நாம் படித்து பல பட்டங்கள் பெற்று இருக்கலாம். வருங்காலத்தைக் குறித்து, தொழில்களைக் குறித்து பல திட்டங்கள் இருக்கலாம். நல்லது தான். ஆனால் ஆவியில் நிரம்பாவிட்டால் ஆவிக்குரிய வாழ்வு இல்லாவிட்டால் அவனைப்போல் இரங்கத் தக்கவன் ஒருவனும் இல்லை. உரோமர் புத்தகம் 8:14ல் சொல்லப்படுகிறது. கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்கள் கடவுளின் மக்கள் அல்லேலூயா! ஆமென். பிரியமானவர்களே நாம் கடவுளின் மக்களாக இருக்க வேண்டுமானால் கடவுளின் ஆவியால் வழிநடத்தப்படுகிறவர்களாக இருக்க வேண்டும்.



## வங்காலையின் முதல் பெண் துறவி

## அருட்சகோதரி கிறாஷியா பற்றிய நினைவலைகள்



விசுவசித்தவள் பேறு பெற்றவள் என்று அன்றொருநாள் அன்னை மரியாளுக்குக் கூறப்பட்ட வார்த்தை இன்று எம் சகோதரி கிறாஷியாவுக்கும் பொருந்தும். விசுவாசத்தின் விளைநிலமான வங்காலையில் 29.04.1919ம் ஆண்டு பிறந்த இவர் கடந்த 59 ஆண்டுகளாகத் திருக்குடும்பச் சகோதரியாக வாழ்ந்து பணி செய்து, 30. 06. 2003ல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வங்காலையில் முடித்த பின்னர் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் பாடசாலையில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அவ்வேளையில் இவரது உள்ளத்தில் இறைவனுக்குத் தன் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டுமெனும் ஆவல் முளைவிட்டது. இவர் தனது துறவு வாழ்வைத் தெரிந்தெடுப்பதற்குப் பின்புலமாய் அமைந்தவர்கள் ஆன்ம வழிகாட்டிகளும், அருட்சகோதரிகளுமே. அவர்களது நெறிப்படுத்தலின்கீழ் வாழ்ந்த இவர் இறை பக்தியிலும், பிறரன்புச் சேவையிலும் ஒளி விளக்காகத் திகழ்ந்தார். இளவாலையில் தனது ஆசிரியர் பயிற்சியை முடித்த பின்னர் நவத்துறவியாகி 30.07.1944ல் தனது முதல் அர்ப்பணத்தையும் 18.12.1949ல் தனது நித்திய அர்ப்பணத்தையும் செய்தார். இளவாலை, யாழ்ப்பாணம், நாரந்தனை, ஊர்காவற்துறை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மானிப்பாய், பேசாலை போன்ற பல்வேறு இடங்களில் ஆசிரியப் பணியிலும், பங்குப்பணிகளிலும் ஈடுபட்ட இவர் தனது இறுதிக் காலத்தை மன்னார் திருக்குடும்ப இல்லத்தில் செலவிட்டார். சென்ற வருடம் இளவாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு இறுதிவரை செபத்திலும், அமைதியிலும் தனது நாட்களைச் செலவிட்டார்.

குருத்துவ துறவற அழைத்தல்களை நிறைவாகக் கொண்ட வங்காலைக் கிராமத்திலிருந்து துறவு வாழ்வைத் தழுவிய முதல் பெண்துறவி இவரேயாவார். இவரது குடும்பமே துறவற அழைத்தல்களின் தொட்டில்தான். இவரது மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் என ஏறக்குறைய பதின்மர் குருத்துவ துறவற அழைத்தல்களைப் பெற்றுள்ளனர்.

நீண்ட காலமாக உடல் நோயினால் வருந்தியபோதிலும் தன் வாழ்வில் இறை திட்டத்தை ஏற்று அமைதியுடன் வாழ்ந்த சகோதரியின் ஆன்மா என்றும் இறைவனில் இளைப்பாற வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## ஆறுதலின் ஆண்டவர்

என்ன செய்ய என்று நான்
ஏங்கியிருந்த பொழுதெல்லாம்
உனக்காக மரித்தேனே - ஏழை
உன் பாவத்திற்காய் இறந்தேனே
என்றுரைத்து தேற்றுகின்றீர்.
உன் ஏக்கம் எல்லாம்
உன் எண்ணம் எல்லாம்
நானாக இருக்கும்போது
ஏக்கம் ஏதம்மா - அந்த
தாக்கம் ஏனம்மா - நீ
தூக்கம் கெட்டு துவண்டது ஏனோ
அழுது துடித்ததேனோ
துக்கங்களால் துவண்டு நீயும்
துடித்த வாழ்வு போதுமம்மா
ஏழை என் செல்வமே
நம்பிக்கைகொள் நாளை வரும்
என்றுரைத்தார் எம் நாதன்.
பீ. சோபா குரூஸ், பெரிய கடை,
மன்னார்.

## அன்னையின் நினைவுகள்

உன்னை விட்டு நெடுந்தொலைவு
உள்ளுக்குள்ளே உன் நினைவு
நள்ளிரவு விழித்திருப்பேன்
நட்சத்திரம் பார்த்திருப்பேன்
பாவைபோல் மனதிலே
கண்சிமிட்டி நீ சிரிப்பாய்
நீ சிரிக்கும் நொடியிலெந்தன்
நெஞ்சினிலே பூமலரும்
குளிரெடுக்கும் சிகரத்திலும்
கொட்டுகின்ற பனியினிலும்
பஞ்சணைக் கதகதப்பு
என்னுயிரை சூடேற்றும்
எத்தனை நாள் தெரியாது?
எப்போது தெரியாது
பெற்றவளே உன்னை என்று
பார்பேனோ தெரியாது?
விட்டு விட்டு ஓடி
வருகின்ற வேலையில்லை
கடமை இது முடித்து விட்டுத்
திரும்பும் வரை
முத்தங்களை வைத்திரு நீ.
த. தவறஞ்சன், அச்சங்குளம்,
நானாட்டான்.

## என் தேடல்கள்......!

இடர்களுக்குள்ளே
இறைவனைக்காண
எத்தணிக்கிறேன்
முடியவில்லை...........!

ஏழ்மையின் நிலையில்
இறைவனைக்காண
ஏக்கம் கொள்கிறேன்
தெரியவில்லை...........!

காலங்காலமாய்
கட்டிக்காத்த - எம்
கண்ணியச்சடங்கினில்
இறைவனில்லை...........!

சீதனக் கொடுமையில்
சிதைந்திட்ட வாழ்வில்
ஏகனைத் தேடினேன்
இயலவில்லை..........!.

என் உள்ளக் கோவிலில்
உறையும் இறைவனை
வேறெங்கோ தேடினேன்
அகப்படவில்லை..........!

எனக்குள்ளே அவர் இருக்கின்றார்
என்னை மாற்றியதன் மூலம்
அவரைக் கண்டுகொண்டேன்.
க. அடைக்கலம்,
அ.ம.தி. குருமடம், யாழ்ப்பாணம்.

## உயிர்ப்பின் துளிகள்

நாட்களெல்லாம் வாடி
நடந்த காலம் ஓடி
நடக்கும் வாழ்க்கை கோடி
வயிறு வற்றி - பசி வேகிப் பற்றி
நாயிலும் கேடாய் நாளெல்லாம் ஓடாய்
உருகி நொந்து உள்ளம் வெந்து
வாழுகிறேன் என்று
பிறர் சொல்லக் கேள்வி!
ஏழைகள் நாங்கள் ஏப்பமிட்டு வாழ
எம்மால் முடியாது எச்சில் இலைகளை
எடுத்து நக்கி ஏனோ வாழ்கிறோம்?
கு. சுபாஜினி, தரம் 11,
பரிகாரிகண்டல், முருங்கன்.

தொடர் கட்டுரை - அங்கம் 10

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்



**- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -**

**பகுதி 1** வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்

பக்தி வழிபாட்டு நோக்கில் வியாகுல பிரசங்கம்

மக்கள் தாங்கள் விளங்கிக்கொண்ட விசுவாச உண்மைகளை தங்கள் விளக்கத்திற்கேற்ப வாழ்க்கை நிலமைக்கேற்ப சூழ்நிலை ஏற்படுத்திய தேவைக்கேற்ப வாழ்ந்தார்கள். அதாவது மக்கள் தங்கள் பண்பாட்டுக் கூறுகளின் வடிவங்களில் அவற்றை வெளிப்படுத்தினர். இவ்வாறான மக்கள் மனம் கவர் சமயப்பற்றார்வமும் பக்தி செயற்பாடுகளும் பண்பாட்டுக் கூறுகள் வழியாகப் பேணப்பட்டு வளர்க்கப்படுகின்றது. இதற்கொப்ப இலங்கையில் குறிப்பாக தமிழ்ப்பகுதிகளில் இவ்விலக்கியங்கள் மக்களின் ஆன்மீக அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற கூறுகளாக விளங்கின.

போத்துக்கேய மிஷனறிமாரால் இலங்கையில் பரப்பப்பட்ட கத்தோலிக்க விசுவாசம் கிறீஸ்துவை மையப்படுத்தப்பட்டதாக அமைந்தபோதிலும் தேவ அன்னை, புனித அந்தோனியார் போன்ற புனிதர்களின் பக்தியில் ஆழமாக ஊன்றப்பட்டதாகவும் விளங்கியது. இவ்வாறு போர்த்துக்கல்லில் இருந்து எமது மண்ணில் நாட்டப்பட்ட பக்தி முயற்சிகள் அருங்குறி நாடகங்கள் மறையுண்மை நாடகங்கள் என்பவற்றினால் உறுதிப்படுத்தப்பட்டன. இந்நிலையில் போத்துக்கேயர் ஒல்லாந்தரால் வெளியேற்றப்பட்டமையும் அதன்பின் கத்தோலிக்கர்மேல் சுமத்தப்பட்ட தனிப்பட்ட பொதுவான துன்புறுத்தல்களும் மக்களில் பக்தி செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தின. இவ்வாறான நெருக்குவாரம் நிறைந்த காலத்தில் கத்தோலிக்கர் தங்கள் மதம்சார் பக்திச் சடங்குகளை வெளிப்படுத்த முடியவில்லை. இங்கு புனிதர் மையப்படுத்தப்பட்ட பக்தி முயற்சிகள் பின் தள்ளப்பட்டு கிறீஸ்து மைய பக்திச் செயற்பாடுகள் முக்கியம் பெறத் தொடங்கின. அதாவது திருவிழா ஆயத்த திரிதின நவநாள் வழிபாடுகள் திருப்பவனிகள் என்பன அரசியல் சூழ்நிலையில் திரைக்குள் மறைய கிறீஸ்துவின் பாடுகளை மையக்கருவாகக் கருத்தைக் கவரத்தொடங்கியது. இந்நிலையில் கத்தோலிக்கர் கிறீஸ்தவம் பற்றிய உள்ளுணர்வுகளைப் பெறத்தொடங்கினர். இந்நிலைக்கு அரசியல் சூழ்நிலையும் காரணமாகும். இப்பின்னணியில் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளும் ஏனைய ஓரற்ரோறியன் சபைக்குருமாரும் கோவா என்னுமிடத்தில் வழக்கத்தில் உள்ள தவக்கால பக்தி முயற்சிகள் இலங்கைக் கத்தோலிக்கருக்கும் சூழ்நிலைக்கேற்ற பக்தி முயற்சி என்பதை உணர்ந்தனர்.

1658ல் ஒல்லாந்தர் இலங்கையில் இருந்து போத்துக்கேயரை வெளியேற்றிய பின்பு அதைத் தொடர்ந்த முப்பது வருடங்கள் இலங்கைக் கத்தோலிக்கர் எந்தவொரு கத்தோலிக்க குருவின் பணியையும் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருந்தனர். இதனால் இக்காலத்தில் ஒழுங்குமுறையிலான வழிபாடுகளோ திருவருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்ளுகின்ற வசதிகளோ மக்களுக்கு இருக்கவில்லை. கத்தோலிக்க விசுவாசம் மக்கள் ஆதரவு பெற்ற பக்தி முயற்சிகளினாலேயே காக்கப்பட்டது. இவ்வாறான பக்தி முயற்சிகள் மக்களால் நீண்ட முப்பது ஆண்டுகள் கடைப்பிடிக்கப்பட்ட காரணத்தினாலேயே யோசவ்வாஸ் அடிகள் கத்தோலிக்கரை இனம் காணக்கூடியதாயிருந்தது. நெடுங்காலமாக ஒல்லாந்தரின் நெருக்குவாரங்கள் காரணமாக மக்களைத் தரிசிக்கவோ, திருவருட்சாதனங்களை நிறைவேற்றவோ முடியாத நிலை இருந்தது. இக்காலத்தில் பக்தி முயற்சிகள்தான் விசுவாசத்தைக் காப்பதற்கு உதவியாக அமைந்தன. (தொடரும்)

மன்னா சிறுகதை

# உறவுகள்

சீ. எஸ். எஸ். குரூஸ் (ஸ்ரீமதி),
கோயில் வீதி, உயிலங்குளம்.



அவள் ஓர் ஆசிரியை! அன்றுதான் அவள் புதிதாக நியமனம் பெற்று அந்தக் கிராமத்திற்கு வந்திருந்தாள். தனக்கு வசதியாக பாடசாலைக்கு அருகிலேயே பொன்னம்மா என்ற ஓர் ஆச்சியின் வீட்டையும் தனது இருப்பிடமாகத் தேர்ந்து கொண்டாள். பாடசாலை தொடங்கிய முதல் நாளிலே தனது பணியையும் தொடங்கினாள். ஆரம்ப நாள் அறிமுகம் செய்வதில் முடிவுற்றது. மாணவ, மாணவிகள் தங்களை அறிமுகம் செய்ய, அந்த ஆசிரியையும் தன்னை அறிமுகம் செய்தாள். தனது பெயர் மேரி என்றும் தான் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவள் என்றும் தனக்கு பெற்றோர் சகோதர சகோதரிகள் உள்ளனர் என்றும் அறிமுகம் செய்தாள். தரம் நான்கிற்கு (04) வகுப்பாசிரியராகவும் பொறுப்பேற்றாள்.

நாட்கள் நகரத் தொடங்கியது. தனது கற்பித்தல் பணியில் முழுமுச்சாக ஈடுபட்டாள். மாணவர்களையும் ஆர்வத்துடன் ஈடுபட முயற்சித்து முன்னேற்றினாள். நாட்கள் மாதங்களாக உருண்டோடியது.

அன்பாகவும் கண்டிப்பாகவும் கற்பித்து வந்த தனது வகுப்பில் ஒரு மாணவியை தினமும் அவதானித்தாள். அம்மாணவி எந்நேரமும் நித்திரை தூங்கிக்கொண்டு இருந்தாள். பல முறை கடுமையாக தண்டித்த ஆசிரியை ஒரு நாள் அவளை அப்படியே விட்டுவிட்டார். தூக்கம் கலைந்து திடீரென கண்விழித்த ஷர்மிலா தனது வகுப்பில் தான் மட்டும் இருப்பதை உணர்ந்து அழத் தொடங்கினாள். மாணவியின் விழிப்பை எதிர்பார்த்து காத்திருந்த ஆசிரியர் அவளருகில் நெருங்கி "ஏனம்மா நீ ஒவ்வொரு நாளும் வகுப்பில் தூங்கிக்கொண்டிருக்கிறாய்? இரவிலே நித்திரை கொள்வதில்லையா? என்று வினவ, அந்தச் சிறுமி ஓலமிட்டு அழுதாள். காரணத்தை கேட்டறிந்த ஆசிரியரின் கண்ணில் நீர் ததும்பியது.

தனது தாய் புற்று நோயால் இறந்து மூன்று வருடங்கள் என்றும் "எங்கட அம்மாவ எனக்கு நன்றாக தெரியும் ரீச்சர், உண்மையா உங்கள மாதிரித்தான் நல்ல வடிவு. என்னோட சரியான நேசம் ரீச்சர். எங்கம்மா இறந்த பிறகு எங்கட அம்மம்மாவோட நான் இருந்தேன். போன வருஷம் அவவும் இறந்திட்டா. பிறகு இப்ப எங்கட அப்பா, சித்தியோடதான் இருக்கிறன். சித்திக்கு ஒரு குட்டித்தம்பியும் இருக்குது. அந்த தம்பிய நான்தான் பாத்துக்கணும். இரவில அழுதான்னா சித்தி எனக்குத்தான் ஏசுவாங்க அடிப்பாங்க. அதனாலதான் நான் வகுப்பில நித்திரை தூங்கிறது ரீச்சர்" என்று கூறி முடித்தாள் சிறுமி ஷர்மிலா.

அன்றிலிருந்து ஆசிரியை மேரி ஷர்மிலாமீது பாசத்தைப் பொழிந்தாள். சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் ஆசிரியை அந்த கிராமத்தைச் சுற்றிப் பார்த்து வந்தபோது ஷர்மிலா, தலையில் பாரமான விறகுச் சுமையோடு சென்றுகொண்டிருப்பதை கண்டதும் வேதனையடைந்தாள். மறுநாள் பாடசாலைக்கு வராத காரணத்தையும் கேட்டறிவதற்காக ஷர்மிலாவின் வீட்டிற்கு சென்றார். ரீச்சர் தந்தையுடனும் சித்தியுடனும் உரையாடினார். அப்போது சித்தி "இவ படிக்க மட்டா ரீச்சர், எப்படி சொல்லிக் கொடுத்தாலும் மண்டையில ஏறவே ஏறாது. இவளுக்கு செலவளிக்கிற பணம் எல்லாம் வீண் ரீச்சர்" என்று சொல்லி முடிப்பதற்குள், ஆசிரியை மேரி "முதல்ல ஷர்மிலாவுக்கு அமைதியான சூழல் தேவை, பின்னர் அன்ப காட்டுங்க, பிறகு அறிவ ஊட்டுங்க" என்று கூறிவிட்டு வீடு திரும்பினாள்.

ஒரு வாரமாகியும் ஷர்மிலா பாடசாலை வராதபடியினால் ஆசிரியை மேரி அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் சென்று முறையிட்டார். பொலீஸ் அதிகாரி மூலமாக ஷர்மிலா பாடசாலையில் அனுமதிக்கப்பட்டாள். எல்லாப் பொறுப்புக்களையும் தானே ஏற்றுக்கொண்டாள். அ[illegible]ன் அறிவையும் ஊட்டி வகுப்பிலே விளை[illegible]லும், படிப்பிலும் மிகுந்த கெட்டிக்காரி ஆ[illegible]ள் ஷர்மிலா. உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டு அமைதியிழந்து அன்பிற்காக ஏங்கித் தவித்த பிஞ்சு உள்ளத்திலே மண்ணை அள்ளிப்போட எண்ணிய தந்தையையும், சித்தியின் நடவடிக்கைகளையும் நினைத்து ஆசிரியை மேரி [illegible]ந்தாள்.

ஞாயிறு பூசையையே அறியாத ஷர்மிலா ஞாயிறு பூசை மட்டுமல்ல நாள் பூசைக்கும் செல்லத் தவறியதில்லை. இப்போது ஞான மறையறிவையும் ஊட்டினாள் மேரி. அன்னை மரியாளின் செபங்களையும் கற்றுக்கொடுத்து, பரிந்துரைகளையும் எடுத்துக்கூறி ஒழுக்கத்தில் சிறந்தோங்க வழி நடத்தினாள் ஆசிரியை மேரி.

எப்படியும் ஷர்மிலாவை ஓர் துறவற சபையிலே இணைத்துவிட வேண்டுமென எண்ணினாள். அந்த வேண்டுகோளை ஷர்மிலாவும் அன்பாக ஏற்றுக்கொண்டாள். நாட்கள் மாதங்களாகி, வருடங்களாகியது. அப்போது மேரிக்கு ஆசிரிய பயிற்சி கலாசாலையின் அழைப்பு கடிதமும் வந்தது. ஆயத்தமானாள் மேரி. தனது பெற்றோரை பிரிந்து வாழ்வதுகூட அவளுக்கு பெரிய கவலையில்லை. பிஞ்சு உள்ளத்தைவிட்டு பிரிந்து வாழ்வதுதான் பெரிய கஷ்டமாகவுள்ளது. ஷர்மிலா க.பொ.த.சா தரம் சித்தியடைந்து உயர்தரத்திற்காக தன்னை தயார்படுத்தினாள். கலைப்பிரிவிலே காலடி எடுத்து வைத்து கண்ணியமாய் கல்வி பயின்றாள். ஆசிரியை மேரியும் பயிற்சிக் கலாசாலைக்கு செல்லும் போது பொன்னம்மா ஆச்சியின் பொறுப்பில் விட்டு அவளின் படிப்பு செலவுகள் அனைத்தையும் மேரி ஏற்றுக்கொண்டாள்.

இரண்டு வருடங்கள் உருண்டோடியது. ஷர்மிலாவும் உயர்தரப் பரீட்சை எழுதி தேர்வில் சித்தி பெற்றாள். மேரி, ஷர்மிலா உறவுகள் தொடர்ந்தது. மேரியும் பயிற்சியை முடித்து வேறு பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றாள். ஷர்மிலாவை ஒரு திருக்குடும்ப கன்னியர் மடத்திலே துறவற வாழ்விற்கு கல்வியை கற்பதற்காக இணைத்தாள். இவ்வளவு காலமும் தனது வாழ்வில் ஒரு எதிர்கால துணைவரைக் கூட அவள் தேட நினைக்காமல் ஷர்மிலாவின் வாழ்வில் காட்டிய அன்பும் அக்கறையும் சொல்ல முடியாதவை. ஆசிரியை மேரி இப்போதுதான் நிம்மதியும், மனநிறைவும் அடைந்தாள். அடிக்கடி கன்னியர் மடத்திற்கு சென்று ஷர்மிலாவை பார்வையிடுவாள். இது இப்படியிருக்க ஆசிரியை மேரிக்கு திருமணம் நிறைவேறியது. தன்னைப் போன்று ஓர் பட்டதாரி ஆசிரியரை தேர்ந்து கொண்டாள். அந்த நல்ல உள்ளத்திற்கு இறைவனும் நல்ல ஓர் வாழ்வை அளித்திருப்பதை எண்ணி மேரி சந்தோஷமடைந்தாள்.

மேரியின் திருமணத்திற்கு ஷர்மிலாவால் செல்ல முடியவில்லை. இறுதி வருடம் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தாள். இருப்பினும் தனது வாழ்வின் சிறப்பை எண்ணி, தாய்க்குத் தாயாக இருந்து தன்னை இந்நிலைக்கு ஆளாக்கிய மேரியின் திருமண நாளில் அவர்கள் இருவருக்காகவும் செபித்தாள் ஷர்மிலா. திடீரென ஓர் கார் தங்கள் கன்னியர் மடத்தின் முன்பாக நிற்பதைக் கண்டு ஓடினாள் ஷர்மிலா.. மேரியும் கணவரும் "சிஸ்ரர் எக்ஸ்கியூஸ் மீ.... ஷர்மிலா இருக்கிறாங்களா" என்று கேட்க "ரீச்சர் நான் தான் அந்த ...... ஷர்மிலா அல்ல இப்போ எனக்கு சிஸ்டர் மேரி என்று பெயர் மாத்தியிருக்கிறேன்" என்று கூறி ஆசிரியையின் காலில் முகம் குப்புற விழுந்தாள். துறவற உடையணிந்திருப்பதைக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்து அவளை கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தாள் ஆசிரியை மேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37வது உலகச் செய்தி நாள் - 37வது உலகச் செய்தி நாள் - 37வது உலகச் செய்தி நாள்

## 37வது உலகச் செய்தி நாள் பற்றி

# திருத்தந்தையின் செய்தி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### 4. தொடர்பு சாதனமும் நீதியும்

இவ்வுலகமெங்கும் நீக்கமற் நிறைந்துள்ள மனித நன்மை பற்றியும் அதே சுற்றறிக்கையில் (மண்ணுலகில் சமாதானம்) மிக அழகாக திருத்தந்தை 23ம் அருளப்பர் தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் எல்லா மனிதனுக்குமுள்ள பகிர்ந்துகொள்ளும் உரிமை, மனித இனத்தின் குடும்பம் அனைத்திற்கும் நன்மை என்கிறார்.

இவ்வகையில் தொடர்பு சாதனமானது, உலகெங்கும் சென்றடைய விசேசக் கடமைகள் கொண்டதாகிறது. பல வேளைகளில், தொடர்பு சாதனமானது சில தனிப்பட்ட பொதுவான தன்னலம் கொண்ட குழுக்களிடம் சிக்கிக் கொள்கிறது என்பது உண்மையே. வாழ்க்கைமீது அவர்கள் ஏற்படுத்தும் விளைவுகளின் தாக்கமானது, ஒரு சாராருக்கெதிராக மற்றொரு சாராரை ஏவிவிடக்கூடாது என்பதே. உதாரணமாக, சமூகத் தகராறுகள், பெரிதாக்கப்பட்ட நாட்டுப்பற்றுகள், இனவாரி மேலாண்மை, இனங்கள் அழிக்கப்படுதல் இவை போன்றவற்றின் பெயரால் உண்டாக்கப்படும் சமூகங்களிடையேயான தகராறுகள், மதத்தின் பெயரால் ஒருவரை மற்றவருக்கெதிராக ஏவுதல் உண்மைக்கும் நீதிக்கும் ஏற்படும் ஒரு பெருந்தோல்வியாகும். இதைப்போலவே, மத நம்பிக்கைகளை வெறுப்புடன் கையாள்வதும் ஒன்று. ஏனெனில், இவை மனிதத் தனித்தன்மையின் மதிப்பு, உரிமை ஆகியவற்றின் ஆன்ம எல்லைகளுக்குட்பட்டதாகும். நடப்புகளை மிகத் துல்லியமாக விளக்குவதன் மூலமும், பலவித கருத்துக்களை நியாயமாகச் சொல்வதன் மூலமும், சமூகத்தின் எல்லா நிலைகளுக்கிடையே நிலவும் மனித உறவுகளிடையே நீதியை வளர்க்கவும், நிறைவேற்றவும் தொடர்பு சாதனங்களுக்கு பெருங்கடமையுள்ளன. இதைச் செய்வதென்பது, பிரிவுகளையும் குறைகளையும் மறைத்துவிடுவது என்பதாகாது. மாறாக, அவைகள் சரியாகப் புரிந்துகொள்ளப்படுவதற்கும், செயல்படுத்தப் படுவதற்கும் துணையாய் அமையும்.

### 5. சமூகத் தொடர்பும் சுதந்திரமும்

உண்மையான சமாதானத்திற்கு, சுதந்திரம் ஒரு முக்கிய சூழலாவது மட்டுமன்றி, அது உண்மையான சுதந்திரத்தின் மிக உயர்ந்த பயனுமாகும். உண்மைக்குப் பணியாற்றும் அதே நேரத்தில், சமூகத்தொடர்பு சாதனங்கள் சுதந்திரத்திற்கும் பணியாற்றுகின்றன. உண்மையினின்று விலகிச் செல்லும்போது, அது சுதந்திரத்தைத் தடை செய்வதோடு, நிகழ்வுகளுக்கு, அறிவற்ற உணர்ச்சி வசப்பட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது.

### கருப்பொருள்: தொடர்புசாதனங்கள் "மண்ணுலகில் சமாதானம்"



மக்கள் உண்மையான போதுமான விவரங்கள் பெறும் நிலையிலிருந்தால் மட்டுமே பொது நன்மையை அவர்கள் செயல்படுத்தவும், ஆள்வோர்களை மக்களுக்கு முறையாக விளக்கம்தர முடிந்தவர்களாகவும் ஆக்க இயலும். இதற்குத் தொடர்புச்சாதனங்கள் சுதந்திரமானதாகவும், அச்சுதந்திரத்தைச் சரியாக பயன்படுத்துவதாகவும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். வியாபாரக் கண்ணோட்டத்துடன் மட்டுமே செயல்படுவதைத் தவிர்த்து, உண்மையான தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவது அவற்றின் மிகப்பெருமைக்குரிய கடமையாகும். சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு சில பொதுக் கட்டுப்பாடுகள் இருப்பினும், அரசின் கட்டுப்பாடுகள் அந்த அளவிற்கில்லை. தங்களின் தார்மீக மனசாட்சியின் அறைகூவல்களைக் கேட்டு நடப்பது நிருபர்கள், எழுத்தாளர்களின் மிகப்பெரிய கடமையாகும். இவர்கள், பணம் படைத்தோரின் - அரசியல் செல்வாக்குள்ளவர்களின் ஆவல்களைப் பூர்த்தி செய்வதையும், உண்மைகளைச் சில வற்புறுத்தல்களுக்காக மாற்றியமைப்பதையும் விட்டு விலக வேண்டும். நடைமுறையில், தங்கள் சமூக முன்னேற்றத்திற்காக சமூகத்திலுள்ள எளிய மக்களுக்கு அவர்களுக்குத் தேவையான உண்மைகளை கிடைக்கச் செய்ய வேண்டும். அத்துடன், அவர்கள் சமூகத்தொடர்பு சாதனங்களின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதில், அவர்களுக்குரிய பங்கை அளிக்க வேண்டும்.

### 6. சமூக தொடர்பும் அன்பும்

"மனிதரின் சினம் கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் நிறைவேறத் தடையாயிருக்கிறது" (யாக் 1:20). பனிப்போரின் உச்சக்கட்டத்தில் திருத்தந்தை 23ம் அருளப்பர் சமாதானத்தின் பாதை எதை நிர்ப்பந்தப்படுத்தியது என்பதை எளிய ஆழமுள்ள எண்ணத்தோடு விளக்கியுள்ளார். இன்றைய காலகட்டத்தில் நிலவிவரும் கொள்கையினின்று முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டைப் பொறுத்தே, சமாதானம் காப்பாற்றப்படுவது அமையும்.

நம்பிக்கையின்மையின் தடைகளை உடைத்தெறிவதன் மூலமும், மற்றவர்களின் கருத்துக்களுக்கு உரிய மதிப்பை அளிப்பதன் மூலமும் அனைவரும் சமாதானத்திற்கு வழி வகுக்க வேண்டும். புரிதல் மரியாதைக்கு அப்பாற்பட்டு, ஒப்புரவும், இரக்கமும் தேவை. "எங்கு வெறுப்பும் பழிவாங்கும் வேகமும் அதிகமாயிருக்கிறதோ: எங்கு மாசற்றவர்களின் சாவையும், இன்னல்களையும் போர்கள் உண்டாக்குகின்றனவோ அங்கு சமாதானம் ஏற்படுத்தவும், மனித மனம், இதயங்கள் ஆறுதல் பெறவும், இரக்கத்தின் அருள் தேவைப்படுகிறது" (க்ராக்கோவ் நகரில் 17.08.2002 அன்று இறையருள் புனித தலத்தில் ஆற்றிய மறையுரையிலிருந்து).

இன்றைய சூழ்நிலையில் இந்த எதிர்பார்ப்புகள், தொடர்பு சாதனங்களில் ஈடுபட்டுள்ளவர்க்கு, எந்த விதத்திலும் ஏதும் பெரிதாக இருந்துவிடாது. "உண்மையின் அடித்தளத்தில் அமைக்கப்பட்டு, நீதியில் நிர்மாணிக்கப்பட்டு, பிறரன்பில் வளர்க்கப்பட்டு, உயிரூட்டப்பட்டு, உண்மை, நீதி, அன்பு ஆகிய முக்கியமானவற்றை ஆதரித்து வளர்க்கும் பொறுப்பு அவர்களின் சமூகக் கடமையாகிறது ('மண்ணுலகில் சமாதானம்' 107).

எனவே, இவ்வாண்டின் உலகத் தொடர்பு சாதன நாளன்று என் செபம் என்ன வென்றால், இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் அவர்கள் சந்திக்கும் சவால்களைச் சரிவர எதிர்கொள்ள வேண்டும் என்பதும், உலகின் பொது நன்மைக்கு பணியாற்ற வேண்டும் என்பதுமாகும். அவர்களின் தனிப்பட்ட நிறைவும், சமாதானமும் மகிழ்ச்சியும், அதைப் பொறுத்தே பெரிதுமிருக்கும். ஒளியும், மனவலிமையும் இறைவன் அவர்களுக்கருள்வாராக!"

**(புனித ப்ரான்சிஸ் தெ சேல்ஸ் திருநாளன்று 24.01.2003 நாளில் வத்திக்கானிலிருந்து).**

# குடும்பக் குவலயம்

## மணமா? திருமணமா?

*ஆசிரியர் செபமாலை ஆட்காட்டி வெளி*



உடலின் உருவமும் உருவமில்லா உள்ளமும் ஒன்று சேர்வதே மனித உயிர். அழிவிற்குரிய உடலை ஆட்சி செய்வதே மனமாகிய உள்ளம். ஞானமும் நிதானமும் மானமும் உள்ளத்தின் செயல் வழிமுறைகள். கடவுள் படைத்த மனிதன் பெற்றுக்கொண்டது மனித உடல். அதில் இறைவனே வாழ்கிறான் ஒரு ஆணின் அங்கங்கள் திரிபுபட்ட மாற்றங்களோடு அமைந்து இரு உடல் சேர்ந்து ஒரு உடலை ஆக்குகிறது. இது மனித வளர்ச்சியின் சுழற்சி. இதன் வடிவமே குடும்பம். இதற்கு வேண்டிய மனித ஏற்பாடே மணம்.

இந்த ஒழுங்கு சீர்குலையும்போது குடும்பப்பிரிவு, விபச்சாரம், கருத்தடை, கருக்கலைப்பு, சிசுக்கொலை என்பவை ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க மனிதனால் முடியாதா? சிந்தியுங்கள். அறியாமையா? தன்நேசமா? ஆணவமா? அடக்கமில்லா அன்றாடப் பழக்கமா? விஞ்ஞான விந்தை தருகிற வியாபார விளம்பரமா? இதனால் மனிதன் கையேற்பது மருந்தில்லா மர்ம நோய்களைத்தான்.

திரு என்பது ஒரு பண்புப் பெயர் அடைமொழியாக ஆண்களுக்கும் தெய்வீக மாண்பை குறிக்கவும் பயன்படுத்தப்படும். குறிப்பாக திருப்பணி. திருப்பலி திருக்கல்யாணம் (இந்து மத கடவுள்) திரு வாத்தி, திருத்தூதர், திருவாளர், திருமதி போன்ற தொடர்களைக் குறிக்கலாம். திரு என்பது புனிதம் உயர்வு, நற்பண்பு உள்ளவர்களையும் நிகழ்வுகளையும் குறிக்கப் பயன்படுத்துவர். இது தமிழர் கலாச்சாரப் பண்பாகும். குடும்பம் கோயிலாக அமைய வேண்டும் என்பதில் பண்டைக்காலத் தமிழர் மிகுந்த கவனம் செலுத்தினர். கண்டிப்பாகவும் தமிழ் பெரியோர் கண்காணிப்புச் செய்தனர். கூட்டுக் குடும்பம் இதற்கு வழிவகுத்தது. தெய்வீக மாண்புள்ளவர்களாகவும் பெற்றோரை மதிப்பவராகவும் பிள்ளைகள் வளர்ந்தனர் எனலாம். இதனால் பெற்றோரைப் பிள்ளைகள் மதித்தனர். திருமணம் தெளிவான சிந்தையோடு நடைபெற்றது. இப்போ உள்ள வாலிப உள்ளங்கள் உடல் அழகை நம்பி குடும்ப சீரழிவையே தமதாக்கிக் கொள்ளுகின்றனர். மனிதனுக்குப் பொருத்துவது எவ்வகை குடும்ப வாழ்வு என்பதை நிட்சயப் படுத்த நாம் செய்ய விருப்பது மணமா? திருமணமா?

என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவது நன்மை பயக்கும். அன்பாகப் பேசிப் அன்பாகப் பழகுபவர்களிடம் அநாகரிகப் போக்கு அமைவது அசாதாரணமே. அன்பான பேச்சும் பாவனையும் இருந்தால் அதிகாரப் போக்கோ அவசரமோ அமையாது.

உள்ளத்தில் உணர்வு பெற்று ஆண் பெண் விருப்பறிந்து நடக்கும் போது உள்ளம் உவகை கொள்ளும். உத்தம உரம் உள்ள உடலழகுள்ள குழந்தைகள் பிறப்பார்கள். இதன் வழி செயல்படுவது இறை சித்தம். இதுவே பேறு. இதையே திருமணவாழ்வு எனலாம். கிறிஸ்தவ குடும்பத்தை வண்டில் சக்கரத்திற்கும் குற்றி நாணயத்திற்கும் கத்தரிக்கோலுக்கும் ஒப்பிட்டுப் பேசுவர்.

வண்டில் சக்கரம் பெரிதாகவும் சிறிதாகவும் இருந்தால் வண்டில் ஓடாது. இருவர் எண்ணங்களும் ஒருங்குசேர அமைய வேண்டும். இதற்கு நடைபெற விருக்கும் நிகழ்வைப் பற்றி மனந்திறந்து பேசியே செயல்படவேண்டும்.

கணவன் அல்லது மனைவி பண்பில் ஒழுக்கத்தில் குறைவு கண்டால் அது செல்லாக் காசாகும். இதனால் ஒருவருக்கொருவர் அறிவூட்டி பெறுமதி சேர்த்துப் பிறரால் பாராட்டுப் பெறவேண்டும் இதுதான் சிறப்பான குடும்பம்.

குடும்பத்தைப் பற்றி வரும் தவறான கருத்துக்களை ஒரு வழி நின்று கத்தரிக்கோல் போல் வெட்டி களைய ஒத்துழைக்க வேண்டும். தம்பதிகள் குடும்பத்தைப் பற்றி ஏனையோர் வினா எழுப்பும் வண்ணம் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். குடும்பங்கள் சமுதாயத் தூண்கள். குடும்பம் சீர்கெட்டால் அந்த சமுதாயம் அது வாழும் கிராமம் மக்கள் மத்தியிலே விமர்சனங்களுக்கு உள்ளாகும். கிடைக்கும் சமுதாய நலன்கள் கூட விலகிப்போகும். குடும்பமாக இணைந்தவர்கள் இணையப் போகும் வாலிபரும் கண்ணியரும் தம் எண்ணங்களையும் [illegible] மிக அவசியம்.

# மருத்துவ மஞ்சரி

## பசி ஏற்படுவது எதனால்?

உடலில் சேமிக்கப்பட்ட சத்துகள் குறைவடையும்போது சமிபாட்டுத் தொகுதி பசி எனும் உணர்வை நம்மில் தூண்டுகின்றது. உணவின் வாசனை, உணவைப் பார்ப்பது, சுவையறிதல், உணவு தொடர்பாக ஏற்படும் ஒலிகள், ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைதல் ஆகியவை பசி ஏற்படுவதற்கான காரணங்களாகும். மூளையின் ஒரு பகுதியில் பசியைத் தூண்டும் விசைகள் உள்ளன. உணவு உண்டு முடித்ததும் 'போதும்' என்ற திருப்தியை உண்டாக்கும் மையமும் அதில் உண்டு. எனவே பசியை ஏற்படுத்துவதும், அதனை அடக்குவதும் மூளைதான். பசி ஏற்படுவது ஒரு ஆரோக்கிய அறிகுறியாகும். பசியின்மை மற்றும் அகோரப்பசி என்பன நோயின் அறிகுறிகளாகும். நீரிழிவு நோய் உள்ளவர்கள், தைரோயிட் சுரப்பி சம்பந்தமான பிரச்சினையுடையவர்கள், அதிகமாக வேலை செய்பவர்கள் போன்றவர்களுக்கு அதிகபசி இருக்கும். காய்ச்சல், புற்றுநோய், குடலில் புழுக்கள், அளவுக்கு அதிகமாகப் புகைபிடித்தல், மதுபானப் பழக்கம் ஆகியவை காரணமாகப் பசி உணர்வு குறையும்.

## சொறி சிரங்கு என்பன உண்டா?

குப்பைமேனி இலைச் சாற்றையும், மஞ்சள் தூளையும் கலந்து, சொறி, சிரங்குகளுக்குப் பூசினால் அவை குணமாகிவிடும் புங்க மரப்பட்டையை அரைத்துப் பூசினால், எல்லாவிதச் சொறி சிரங்குகளும் குணமாகும். வேப்ப இலையையும் மஞ்சளையும் அரைத்துப் பூசினால், சொறி சிரங்குகள் குணமாகும். கருஞ்சீரகத்தைப் பொடித்துத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்த வேண்டும். இப்படி நாற்பது நாள்களுக்குத் தொடர்ந்து அருந்தினால் இரத்தம் தூய்மையாகிச் சொறி, சிரங்கு, அரிப்பு ஆகியன குணமாகும். தினந்தோறும் கடல் நீரில் நீராடினால், உடலில் அரிப்பு, சொறி, சிரங்கு ஆகியன குணமாகும். அகத்திக் கீரையை அடிக்கடி சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும். உடல் அரிப்பு சொறி, சிரங்கு ஆகியன விரைவில் குணமாகும். தெளிந்த சுண்ணாம்பு நீரையும் சம அளவு நல்லெண்ணெய்யையும் கலந்து உடல் முழுதும் பூச வேண்டும். சற்று நேரம் ஊறியதும், கசகசாவை வெண்ணெய்போல் அரைத்து உடல் முழுதும் பூசவேண்டும். ஒரு மணி நேரம் கழித்து தேய்த்துக் கழுவி நீராட வேண்டும். அரிப்பு, தடிப்பு, சொறி, சிரங்கு ஆகியன குணமாகும்.

டாக்டர்: ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் செக்கப்புக்கு வந்திடனும்.
நோயாளி: வரமுடியலிண்ணா?
டாக்டர்: பீஸை (காசை) மட்டுமாவது அனுப்பி வையுங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் நிழலாடும் அருட்சகோதரி எவறிஸ்ரா



என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் என்ற இயேசுவின் வார்த்தைக் கேற்ப, இறைவிசுவாசத்தில் ஆழமாக வேரூன்றப் பெற்று வாழ்ந்தவர் சகோதரி எவறிஸ்ரா. தனது வாழ்வின் இறுதிக்கட்டம் வரை தனது விசுவாசப் பயணத்தில் இறைவனுடன் இணைந்து சென்று தான் பெற்ற விசுவாசத்தைத் தான் வாழ்ந்து பணியாற்றிய இடங்களிலெல்லாம் ஊன்றினார்.

தனது கலகலப்பான சுபாவத்தினாலும், பகிடிப் பேச்சுக்களினாலும், தான் இருக்கும் இடத்தையே மகிழ்வின் சூழலாக மாற்றும் இயற்கையான குணம் கொண்டவர்.

இவர் நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி டோமினிக் சந்தியாப்பிள்ளை, தங்கரட்ணம் தம்பதிகளின் ஆறு புத்திரச் செல்வங்களில் நான்காவது மகவாக 1926ம் வருடம் ஐம்பசித் திங்கள் 24ம் நாள் பிறந்தார். இளமையிலேயே தந்தையை இழந்த சிறார்கள், அன்னையின் அன்பிலும், அரவணைப்பிலும் வளர்ந்து, கல்வி கற்றுத் தேறினர். இவர் தனது பாடசாலைக் கல்வியை நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் முடித்த பின்னர், தனது ஆசிரியர் பயிற்சியை இளவாலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மேற்கொண்டார். இளவாலையில் இருந்த காலத்தில் அருட்சகோதரிகளின் வழிகாட்டல்களினாலும், அறிவுரைகளினாலும், வாழ்க்கை நெறிகளினாலும் கவரப்பட்டுத் தானும் துறவற வாழ்வைத் தழுவ ஆவல் கொண்டார்.

தனது மகளின் மனவோட்டத்தை அறிந்து கொண்ட அன்னை அவளது தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தார். எத்தனையோ விதமான அறிவுரைகளைக் கூறி மகளைத் தன் பாதைக்குத் திருப்ப முயன்றார். அன்னையின் எதிர்ப்புகளுக்குத் துணிவுடன் முகம் கொடுத்த மகள் தனது இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக அன்றைய யாழ் ஆயராக இருந்த மேதகு கியோமர் ஆண்டகையிடம் அனுப்பி வைக்கப்பட்டார். அவர் சிறிது வேளை இவருடன் அளவளாவிய பின்னர் தனது அனுமதியையும், ஆசீரையும் வழங்கி அனுப்பி வைத்தார். இவரது வாழ்வில் அன்னையின் தடைகள் மூலம் வந்த முதலாவது சோதனையில் இறைவனின் தலையீட்டை உணர்ந்தார். இறைவனின் உதவியால் மலைபோல் எழுந்த தடைகள் யாவும் பனிபோல் உருகி மறைந்தன. எனவே மகிழ்வுடன் நவத்துறவு வாழ்வை மேற்கொண்ட இவர் தனது முதல் அர்ப்பணத்தை 18.12.1948ம் ஆண்டிலும் இறுதி அர்ப்பணத்தை 18.12.1953லும் செய்து தன்னை முழுமையாக இறை மனித சேவைக்கு அர்ப்பணித்தார்.

இவர் தனது கல்விப் பணியை இளவாலை, சில்லாலை, ஊர்காவற்துறை போன்ற இடங்களில் மேற்கொண்ட பின்னர் 1955ம் ஆண்டு தொடக்கம் 1960ம் ஆண்டு வரை பண்டத்தரிப்பு நவத்துறவியர் இல்லத்தில் ஆயத்த நிலையினரை நெறிப்படுத்தும் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டார். அதேவேளை சிறிது காலம் நித்திய அர்ப்பணம் செய்ய ஆயத்தம் செய்த சகோதரிகளுக்கும் பொறுப்பாயிருந்தார். பின்னர் முல்லைத்தீவு, பறப்பாங்கண்டல், வங்காலை ஆகிய இடங்களில் குழுத்தலைவியாகப் பணிபுரிந்த அதேவேளை பல்வேறு பணிகளிலும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டதன் மூலம் மக்களது அன்பையும், அபிமானத்தையும் பெற்றுக்கொண்டார்.

பலவித பணிகளில் ஈடுபட்ட போதிலும் இவரது உள்ளம் கல்விப் பணியிலேயே தாகம் கொண்டது. எனினும் தலைவிகளின் விருப்பத்திற்குத் தனது விருப்பத்தைக் கீழ்ப்படுத்திக் கொண்டதனாலோ என்னவோ, இறைவனும் இவரது உள்ளாந்தர ஆவலை நிறைவேற்ற விருப்புக் கொண்டார்போல் இவர் மீண்டும் கல்விப் பணியில் ஈடுபட தலைவிகள் ஊடாக வழிவகை செய்தார்.

மீண்டும் கல்விப்பணியில் ஈடுபட்ட இவர் ஆன்மீகப் புதிப்பித்தலுக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். பயிற்சி முடிந்து நாடு திரும்ப இருந்த வேளை அங்கு பணிபுரிந்த எம் சகோதரிகள், இவர் சிறிது காலம் அங்கு தங்கித் திருக்குடும்ப பொதுநிலையினரின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி நின்றனர். இறைசித்தம் இதுவெனக் கண்ட எம் சகோதரியும் அதற்கு உடன்பட்டார். 10 ஆண்டுகள் இவர் அங்கு பணிபுரிந்த காலமானது இந்தியப் பிரதிநிதித்துவத்தின் பொற்காலம் என்று குறிப்பிடலாம். பொதுநிலையினரின் பணியுடன் இந்திய இளம் கன்னியரின் உருவாக்கத்திலும் முக்கிய பங்கு வகித்தார். இச் சந்தர்ப்பத்திலேயே எமது சபை நிறுவனரதும், எமது சபையினதும் பிறப்பிடமான பிரான்ஸ் தேசத்திலுள்ள மாட்டியாக் என்னும் இடத்தையும், அவர் தரிசிக்க வேண்டுமென்று நீண்டகாலமாக ஆசித்து நின்ற லூர்துபதியையும் தரிசிக்கும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது.

பின்னர் 1995ல் நாடு திரும்பிய இவர் மடுவில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் இரண்டாவது தடவையாகப் பள்ளிமுனைக்கு அனுப்பப்பட்டார். இவ்வாறாக இவர் மன்னார் மறைமாவட்டத்தில் 25 ஆண்டுகள் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இறுதிப்பணித்தளமான பள்ளிமுனையில் இவர் மேற்கொண்ட பணிகளோ பற்பல. தனக்கென்று ஒரு நேரத்தை ஒதுக்காது தன் சுகத்தைக் கவனியாது, குழுவின் பணிகளில் ஈடுபட்டிருந்த அதேவேளை இல்லத்தரிசிப்பு, மரியாயின் சேனை, அருட்சாதன ஆயத்தம், சிறுவர் முதியோர் கல்வி, டோமினிக் சாவியோ கூட்டம், பகல் இரவு நேரக் கல்வியூட்டல், தென்பகுதியிலிருந்து தமிழ் கற்கவரும் அருட்சகோதரர், குருக்களுக்குத் தமிழ் கற்பித்தல் போன்ற இன்னோரன்ன பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்.

பல காலமாக இதயநோயின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த எம் சகோதரி அதனையும் தனது கலகலப்பினாலும், சிரிப்பினாலும் மேற்கொண்டு வந்தார்.

இவர் விட்டுச் செல்லும் தடங்களான விசுவாசம், அன்பு, மகிழ்ச்சி, ஆன்மீக வாஞ்சை, ஆழமான சபைப்பற்று, இறைசித்தத்திற்குப் பணிந்த மனது, போன்ற அரிய குணங்கள் என்றும் எம்மிடையே நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

அன்பான சகோதரி எவறிஸ்ரா இத்தனை காலமும் நீங்கள் எம்முடன் இணைந்திருந்து எமது அருங்கொடையான ஐக்கியத்தை வாழ்ந்து மற்றவர்களையும் வாழச் செய்தீர்கள். எமது மனப்போக்கான விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்துதலை தாங்கள் வாழ்ந்து, பணியாற்றிய இடங்களில் நிறைவாகச் செய்துள்ளீர்கள். தாங்கள் மனித மனங்களில் விதைத்துச் சென்ற விசுவாச வித்து வீண் போகாது. விட்டுச் சென்ற பணியை நாம் தொடார இறைவனிடம் வேண்டுங்கள்.

# உங்களுக்கு தெரியுமா?

## மாணவர் மறையறிவுப் பகுதி இல. 4

மாணவர்களின் மறையறிவை வளர்க்க
மன்னா ஆரம்பிக்கும் புதிய பகுதி

*கேள்வி கேட்பது நாங்கள் விடை எழுதுவது நீங்கள்*

சிறந்த விடைக்கு ரூபா 100 பரிசளிக்கப்படும். அதுவே ஒரு மாணவரின் சொந்த ஆக்கமெனில் பரிசு இரட்டிப்பாக்கப்படும். மாணவரின் ஆக்கமானால் ஆக்கத்தின் மறுபக்கத்தில் மாணவர் பெயர் - வகுப்பு - பாடசாலை - என்பன குறிக்கப்பட வேண்டும். அத்துடன் அதிபர், பிரதி அதிபர் அல்லது சமய பாட ஆசிரியர் இவர்களில் யாராவது ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மிகச் சிறந்த விடை அனுப்புவோரில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டு பாராட்டுக்குரியர்கள் என்ற பெயரில் அவர்கள் பெயர் முகவரிகள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். பரிசுக்காக தெரிவு செய்யப்படும் மிகச்சிறந்த விடை மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

மன்னார் நகரில் இயங்கும் மன். புனித சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரியை நாம் அறிந்திருக்கிறோம். இக்கல்லூரி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக டிலாசால் சகோதரர்களின் தலைமத்துவத்தில் இயங்குகின்றது என்பதும் நமக்குத் தெரியும். இக்கல்லூரி மன்னார் மாவட்டத்திலே பல கல்விமான்களை உருவாக்கி வரலாறு படைத்துள்ளது. இக்கல்லூரி இன்றும் பல துறைகளில் சாதனைபுரிந்து வருவது நாம் அறியாததல்ல. இந்த டிலாசால் சபையை உருவாக்கியவர் யார் தெரியுமா? அவரின் பெயர் புனித டிலாசால் என்பதாகும். அவரைப்பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்? போட்டியில் கலந்து பரீட்சித்துப் பாருங்கள்.

### போட்டி இலக்கம் - 04 ற்கான கேள்வி

01. புனித டிலாசால் அவர்களின் இயற்பெயர் என்ன?
02. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
03. இவர் பிறந்தது எங்கே?
04. இவரின் பெற்றோர் யார்?
05. இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டது எப்போது?
06. டிலாசால் சபையை இவர் உருவாக்கியது எப்போது?
07. இவர் இறந்தது எப்போது? எங்கே?
08. இவரை அகில உலகக் கத்தோலிக்க ஆசிரியர்களின் பாதுகாவலராகப் பிரகடனப்படுத்திய திருத்தந்தை யார்?
09. இவர் ஏற்படுத்திய சபையின் முக்கிய இலக்கு, நோக்கம் என்ன?
10. இன்று இலங்கையின் இச்சபையின் தலைவராக இருப்பவர் யார்?

*உங்கள் விடைகள் எமக்குக் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 20. 09. 2003.*

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி -
பதிப்பாசிரியர்,
மன்னா பணியகம்,
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்.

நீங்கள் விடையை எழுதி அனுப்பும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் உங்களுக்கு தெரியுமா? - (மாணவர் மறையறிவுப் பகுதி) என்று குறிப்பிடவும்.

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 2 இற்கான கேள்விக்கு 64 பேர் விடையளித்திருந்தனர்.

**அவர்களில் சரியான விடையளித்தவர்கள் 5 பேர் மட்டுமே. அவர்கள் விபரம் வருமாறு**

1. தி. கலைவாணி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
2. அ. றோகினி, பெரிய முறிப்பு, பெரிய குஞ்சுக்குளம், கற்கிடந்தகுளம்.
3. அ. ஷரோமி, கி.அ. மாணவியர் இல்லம், பெரியமுறிப்பு. முருங்கன்,
4. யே. ஆன்ஜசில் லெம்பேட், தரம் - 05, மன்/புனித/ஆனாள் ம.ம.வித். வங்காலை.
5. யே. மேரி அருண்சி லெம்பேட், தரம் - 03, மன்/புனித/ஆனாள் ம.ம.வித்தியாலயம், வங்காலை

சரியான விடைகள் எழுதி பரிசு பெறும் அதிஸ்ரசாலி
தி. கலைவாணி, முருங்கன் பிட்டி, முருங்கன்.

**இலக்கம் 2றகான சரியான விடைகள்**

1. யூகோஸ்லாவியா
2. ஸ்காப்ஜே
3. நிக்கோலா, திரானா
4. அல்பேனியா
5. 1910.ஆகஸ்ட்.26
6. லாசர், ஆஜே.
7. அக்னஸ் கொன்சாகா பொஜாக்லியு
8. 1929.ஜனவரி 6ம் நாள்
9. அன்பின் பணியாளர் சபை
10. 1997. செப்டெம்பர்.5ம் நாள்.

உங்களுக்குத் தெரியுமா
மாணவர் மறையறிவுப்போட்டி இல. 3றகான மிகச் சிறந்த விடை எழுதி பரிசு பெறுபவரையும் அவரது விடையையும் பாராட்டுப் பெறுவோர் விபரங்களையும் அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்

# அரசியல் அரங்கம்

**உரத்த சிந்தனை - உரைப்பது - ஸ்நாபகன்**

## இடைக்கால நிர்வாகம் பற்றிய இழுபறி

இடைக்கால நிர்வாகம் பற்றிய சர்ச்சை இன்றைய இலங்கை அரசியலில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அரசாங்கம் இப்பொழுது தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக நகல் சட்ட அரசியல் ரீதியான விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். சர்வதேச ரீதியாக அங்கீகாரத்தையும் தமிழ் பேசும் மக்கள் இதுவரைகாலமும் வெளிப்படுத்திய தேசிய அபிலாசைகளை உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டும். கடந்த காலத்தைப் போன்று வெறுமையான எழும்புக் கூடாக இந்த சட்டவரைபு இருக்கக்கூடாது.

அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான நகர்வுகளை புரட்டும் வகையிலே எதிரணியினரும் இனவாத சக்திகளும் பயங்கரமான ஜீவ மரணப்போராட்டத்தை நடாத்த முற்படுகின்றனர். நீண்ட காலமாக நம்பிக்கெட்ட வரலாற்றை இனிமேலும் தொடரவிடக் கூடாது.

விடுதலைப்புலிகள் இனிமேல் தாங்கள் முன்வைக்கும் இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனைகளைச் சாதகமாக ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையிலே நகர, அரசாங்கம் முன்வருமானல், சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னேற்றகரமான பாதையிலே, மேலும் இருதரப்பு விட்டுக்கொடுப்புகளுடன் தொடருவதற்குறிய வாய்ப்புகள் உள்ளதென்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இலங்கை இராணுவத்தைவிட வலுவுள்ள கட்டமைப்பு ஒன்றைக் கொண்டுள்ள விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை கொடுப்பது பிரிவினைக்கு அத்திவாரமாகி விடும் என்ற விஷமப் பிரசாரம் எதிரணியிலிருந்து வெளிப்படுகின்றது. இந்த மனப்பான்மை இருக்கும்வரை ஆரோக்கியமான தீர்வு என்பது எட்டாக்கனியே




### வரலாற்று மேற்கோள்

எங்களை மன்னித்தருளுமாறு வேண்டுவதற்காக எல்லாம் வல்ல ஆண்டவர் முன்பாக முழந்தாளிட்டு நாம் நிற்கிறோம்.

*தென்னாபிரிக்காவின் கடைசி வெள்ளையின ஜனாதிபதி எவ். டபிள்யு. டி. கிளார்க் 1996ல் கூறியது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையியல் - சமூகக் கண்ணோட்டம், இறையியல் - சமூகக் கண்ணோட்டம், இறையியல் - சமுகக் கண்ணோட்டம்.




# மனித மாண்பும் அவன் தெய்வீகமும்



அருட்பணியாளர் போல் நட்சத்திரம், அ. ம. தி
வசந்தகம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

### இரண்டாம் வத்திக்கான் சங்கமும் மனிதவாழ்வும்....

இச்சிந்தனைகள் திருச்சபையின் மறுமலர்ச்சிக்காகவும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காகவும் மட்டுமல்லாது மனிதனின் வாழ்வில் குறுக்கிடும் வினாக்கள் அனைத்திற்கும் தீர்வு கண்டு அவனின் மாண்பை உறுதிப்படுத்தவும் உலகின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் வழிசெய்யவும் துணை நிற்கின்றன.

இறைவனின் திட்டத்தில் மனித மாண்பு மிக்க அழைத்தல் சமூதாயத்தில் மனிதன், சமூகச் சிக்கல், மனிதனின் பண்பாடுகள், பொருளாதார முறை, சமூக நீதி, அனைத்து நாட்டு சமூக அமைதி என்பவை மையப் பொருளாக உள்ளன. உடலாலும் ஆன்மாவாலும் ஒன்றான மனிதன் தனது உடல் வாழ்வை வெறுக்க முடியாது. கடவுளால் படைக்கப்பட்ட உடல் இறுதி நாளில் மீண்டும் உயிர் பெறப்போவதால் அதனை மனிதன் நல்லதாகவும் மதிப்பிற்குரியதாகவும் கருதிப் பேண வேண்டும். மனிதன் மனிதத்தின் மாண்பின் மூலமாக தன் உடல் வழியாக இறைவனைப் புகழ வேண்டும் (இல.14). தனது மனித மாண்பைக் காப்பாற்ற மனிதன் தனது வாழ்வில் சரியான மதிப்பீடுகளைக் கொண்டிருக்க வேண்டும். அதற்கு இறைவனின் அறிவானது ஒளியாக இருந்து வழிநடத்துவது அவசியம். (இல 15)

### திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பர் நோக்கில்

மனிதனின் இறைத்தன்மையிலேதான் உண்மையான மனித மாண்பு தங்குகின்றது. மனிதன் எப்பொழுது தனது மனச்சான்றின் கட்டளைக்குச் சுதந்திரமாகப் பதிலிறுக்கின்றானோ, எப்பொழுது பொறுப்புடன் செயற்படுகின்றானோ, எப்பொழுது மனித குலத்தை அன்பு செய்கின்றானோ அப்பொழுது மனிதன் தனது சமூகத்தில் பொறுப்புள்ளவனாக மாறுகின்றான். ஆனால் இன்று பல்வேறுபட்ட மனித சிந்தனைகளாலும் செயற்பாடுகளாலும் மனித மாண்பானது ஊனமுறுகின்றது. இறைவனுடைய ஆழுமையில் நேரடியாகப் பங்குகொள்வதன் மூலம் மனிதன் அதை மீளவும் பெறலாம். எனவே மனிதன் தனது ஆன்மீகத்தில்தான் இவ்வுலக வாழ்வைத் தேட வேண்டும். இறையுணர்வினால் ஈர்க்கப்பட்டு மனித நேயங்கள் நிறைந்த வாழ்வைக் கட்டியெழுப்பும்போதுதான் தனது மாண்பின் விதைகளை மனித சமூகத்தில் விதைக்க முடியும் இந்த மாண்பைத் தனது நாளாந்த உலகில் வாழ்வில் சமுகச் சூழலில் வாழவும் கடமைப்பட்டுள்ளான்.

மனிதன் தனது தெய்வீக அழைத்தலுக்கு இசைவாகத் தன்னைப் படைத்தவரின் விருப்பங்களுக்கும் நோக்கங்களுக்கும் கீழ்ப்படிந்து வாழ்வின் மூலம் மாண்புள்ள மனித வாழ்வை நிலைநாட்டுகின்றான். இது அவனின் உரிமை. எந்த சக்தியும் அதை அவனுக்கு மறுக்க முடியாது என்று மனித மாண்பு பற்றி ஜேர்மனிய ஆயர் சங்கம் கூறுகிறது. இவற்றை உள்ளடக்கித்தான் வத்திக்கான் சங்கம் மனிதனின் மாண்புயர் அழைத்தலை அறிக்கையிடுகின்றது. அத்துடன் அவன் தன் அழைத்தலுக்கேற்ப வாழ்வதற்கு மாண்புள்ள வழிகளை முன்வைக்கின்றது.



### மனித உரிமை சாசனமும் மனித மாண்பும்

1948இல் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச மனித உரிமைச் சாசனம் மனித மாண்பையே மையப்படுத்துகின்றன. மனிதனது பிறப்புரிமை மீறப்படும் பட்சத்தில் அல்லது மறுக்கப்படும் பட்சத்தில் அவனது மனித மாண்பும் தனித்துவமும் அழிக்கப்படுகின்றது. இன, மொழி, சமய, நிற, பால் ரீதியான கலாச்சார உரிமைகள் அனைத்தும் பேணப்பட வேண்டும். அப்போதுதான் மனிதன் ஒவ்வொருவனும் நீதியைக் காணலாம். இவைகள் மீறப்படும் பட்சத்தில் சர்வதேச சமூகங்கள் ஒன்றுசேர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகின்றது.

### இன்று நம் மண்ணில் மனித மாண்பு

இன்று நம் மண்ணில் நாம் காண்பதென்ன? அனுபவிப்பதென்ன? இருளில் தடுமாறும் உலகைக் காண்கிறோம். இதயத்தைக் கல்லாக இறுக்கிக்கொண்ட மக்கள் சமூகத்தைக் காண்கின்றோம். ஒளியிழந்த விழிகளைக் காண்கின்றோம். சிதைந்த வாழ்வைக் காண்கின்றோம். குருட்டு நம்பிக்கைகளும் மூடப்பழக்க வழக்கங்களும் முதன்மை பெறுவதைக் காண்கின்றோம். பொருளற்றுப்போய் விட்ட சமூகக் கட்டுப்பாடுகளும் பொய்யாகிவிட்ட மரபுகளுமே இன்று ஆட்சி செலுத்துகின்றன. இறையுணர்வற்று தனக்குள்ளே பிளவுபட்டுக்கிடக்கின்ற மனித குலத்தைக் காண்கின்றோம் சாவின் ஆட்சியும் அநீதியின் சொல்லும் கோரப்பிடியும் மனித மாண்பின் சிதைவுளும் எம் தாய்த்திருநாட்டில் திருமுகத்தைக் களங்கப்படுத்திக் கொண்டிருக்கின்றன. வதை முகாம்ங்கள், பாலியல் வன்முறைகள், கொலைகள், கொள்ளைகள், அகதிமுகாம்கள் பட்டினிச்சாவுகள், நோய்கள், நோய்களுக்கு மருந்தற்ற நிலை, மனிதப் புதைகுழிகள் இவைகள்தான் இன்று நமது மனித மாண்பைக் குலைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரே வசனத்தில் நம் மண்ணின் தற்கால நிலையைச் சொல்லுவதென்றால் இப்படித் தோன்றுகின்றது. நமது மனித மாண்பின் சிதைவுதான் நம் தமிழ்க் கலாச்சாரத்திற்கு இன்று கிடைக்கும் சவுக்கடி.

### நம்பணி

இச்சிதைவுகள் எம்மைப் பாதிக்காத வகையில் நாம் அலட்சியமாக இருக்கமுடியாது. நமது வாழ்வு மாண்புள்ள நிலையில் ஈடுபட்டு நல்வாழ்வாக மாறவேண்டும்.

நமது சமூகப்பார்வை விரிய வேண்டும். நம் மண்ணின் போலித்தனங்களையும் மேலோட்டங்களையும் களையும் உள்நோக்கு வேண்டும். நமது உறவுகள் எல்லாம் இறுதி ஆழம்வரை ஊடுருவும் அன்பின் ஈடுபாடுகளாகப் பரிணமிக்க வேண்டும். மனித மாண்பை பேணுவதில் கிறிஸ்துவே எங்கள் மையமாக இருக்கவேண்டும்.

எல்லோரும் கல்லைக்காண்கின்றனர். சிற்பியோ அதில் கலையைக் காண்கின்றான். அதுபோல அழிவுக்கு ஆளாகின்ற வையத்து மாந்தரின் வாழ்விலும் வரலாற்றிலும் இயேசு வந்து பொழியக் கூடிய வளர்ந்து படரவேண்டிய நிறைவாழ்வின் ஆட்சியையும் நீதி அமைப்புக்களையும் கற்பனை செய்தார். இதுதான் இயேசு கண்ட கனவு - இறையரசு. இதுவே மனித சமூகத்தின் நிறைவான வருங்காலம் முழு வளர்ச்சி கண்ட நிலை. இது மனித குலம் பெற்றுச் சிறக்க வேண்டிய புது வாழ்வு - புனித வரலாறு. மனித மாண்பு அதுவே நம் மண் இன்று விரும்பும் மனித மாண்பாக அமைய வேண்டும்.

இயேசுவின் உலக ஈடுபாடு ஆழமானது. வாழ்வின் நீதிப் பாதையில் வையத்து ஈடுபாட்டின் உள்ளாழத்தில் அவர் கற்பனை செய்த இறை உலகம் வெறும் கனவோ கானல் நீரோ அன்று. வாழ்வின் சுனையாகிய வரலாற்றின் பிறப்பிடமாகிய கடவுளின் கைகளில் இருந்து அவரது புதுப்படைப்பாகப் புலர்ந்து கொண்டிருக்கும் புது உலகம்தான் அது. இப்புது உலகின் அடித்தளம் மனித மாண்புதான். இயேசுவின் பணிக்களத்தில் அவர் பருகிய நீதிப்பாத்திரத்தின் இறுதித் துளியில் இறைவனும் மனிதனும் முழுமையாகச் சந்தித்தனர். முற்றும் ஒன்றித்தனர். இந்த இறை மனித ஒன்றிப்பால் இறைவன் மனிதனைப்பற்றிக் காலா காலமாகக் கண்டிருந்த கனவு இறுதிவரையில் மனிதன் தனது வருங்காலத்தைப் பற்றிச் செய்துகொண்ட கற்பனையாகவே இருந்தது.

இறைவன் மனிதனுக்கென வகுக்கும் மீட்புத் திட்டம் மனிதன் தனக்கெனத் தானே வகுக்கும் வாழ்வுத் திட்டமாக வளர்ந்தது. இயேசுவின் ஈடுபாட்டின் இறுதிப் பெருநிலை அவரது இறப்பு, உயிர்ப்பு. அதில் மனிதனாக அவர்தானே தனது வாழ்வுக்குப் புனைந்துகொள்ளும் விழுமியப் பொருள்தான் "இறைவனே மனித வாழ்விற்கெல்லாம் கற்பிற்கும் விண்ணகப் பொருள்" என்பதாயிற்று. கிறிஸ்தவர்களாகிய எங்கள் ஒவ்வொருவருக்கும் இழந்து கொண்டிருக்கும் மனித மதிப்பீடுகளை மீளவும் நிலைநிறுத்துவதிலும் அதைக் கட்டியெழுப்பும் பாரிய பணியிலும் கடமையும் பொறுப்பும் உண்டு என்பதை மறந்துவிட முடியாது. மனித மாண்பையும் நீதியையும் அடித்தளங்களாகக் கொண்டு செயற்பட முனையும் இக்காலகட்டத்தில் அர்ப்பணம் நிறைந்த சேவையும் மாண்புள்ள உறவுகளும் முன்மாதிரியான வாழ்வின் சான்றுகளும் அழிவின் விழிம்பிலுள்ள நம்மண்ணைக் காப்பாற்றப் பயன்படும் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

மனித மாண்பையும் நீதியையும் முன்னெடுத்துச் செல்லுகின்ற அருள் அடையாளமாக ஒவ்வொருவரும் மாறவேண்டும். எங்கள் வாழ்வால் மனிதம் தளிர்க்கட்டும். (முற்றும்)

# இளைஞர் பொழிவு

## கனவு காணுவோம்..............!



மனிதனால் தொட முடியாத உயரங்கள் என்று எதுவுமே இல்லை. உங்களுடைய விருப்பம் கைகூடவில்லை என்றால், உங்களிடம் உருப்படியான கனவுகள் இல்லை என்றுதான் அர்த்தம்.

சாதனைகள் கனவில் இருந்துதான் பிறக்கின்றன. கனவு என்பது கரு. அந்தக் கருவில் இருந்து மகிமைக்குரிய சாதனை பிறக்கிறது. நீங்கள் எப்போது ஒரு கனவை உங்களுக்குள் ஏற்றுக்கொண்டு விடுகிறீர்களோ அப்போதிலிருந்தே வெற்றியும் ஆரம்பமாகி விடுகிறது.

கார்ட்டுன் படங்களை வரைந்து தள்ளிக்கொண்டு இருந்த வால்ட் டிஸ்னியின் கனவு, உலகக் குழந்தைகளுக்காக ஒரு விந்தை உலகை உருவாக்க வேண்டும் என்பது. கனவுகளை நனவாக்கும் இரகசியம் அவருக்கத் தெரிந்திருந்தது. டிஸ்னிலாண்ட் உருவாயிற்று அந்த வித்தை பலருக்கும் சாத்தியம்தான்.

நீங்களும் கனவு காணுங்கள். உங்கள் கனவுகளை விட்டு விலகாதீர்கள். அடைகாத்து வாருங்கள். வளமையான, முழுமையான வாழ்க்கையைப் பெறுவீர்கள். நீங்கள் கனவுலகில் எதைத் தேர்வு செய்கிறீர்களோ அதுதான் உங்களுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. ஒரு மன்னனின் கனவில்தான் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் பிறந்தது. ஒரு கவிஞனின் கனவில் இருந்துதான் கீதாஞ்சலி தோன்றியது.

பல அடிமைகளின் கனவில் இருந்துதான் ஒரு நாடு சுதந்திரம் பெற்றது. மிகச் சிறந்த கனவுகளைக் காண்கிறவராக இருங்கள். பல உயரங்களை நீங்கள் தொடுவீர்கள். பல வெற்றிகளை நீங்கள் பெறுவீர்கள்.

## விண்ணிலிருக்கும் அண்ணாவிற்கு

## ஓர் கடிதம



அன்புள்ள அண்ணாவிற்கு,

உங்கள் பாசமுள்ள தங்கை உலகிலிருந்து எழுதுவது, சாமாதானம் என்ற சுவாசக் காற்றை சுவாசித்து மகிழ்வுடன் இருக்கின்றேன். உங்களை எப்போதும் நினைக்கின்றேன், நினைவினால் வந்த மகிழ்வைப் பகிருகின்றேன். மேலும் அண்ணா நோய் உன்னைக் கொண்டு செல்லவில்லை. மாறாக தீ உன்னைக் கொண்டு சென்றது. ஞாபகமிருக்கிறதா? ஆறு வருடங்களின்பின் விடுமுறைக்காக நீ வந்தபோது மகிழ்வுடன் நான் உன்னிடம் கேட்டேன் "ஏன் இந்த போராட்டம், துப்பாக்கி வைத்துவிடு, தயவு செய்து வந்து விடு. நாமும் மக்களோடு மக்களாக மடிந்து விடுவோம்" உனது பதில் எனக்கு வேதனையையும், நம்பிக்கையையும் தந்தது. எப்படி என சிந்திக்கிறாயா? "தங்கையே நாம் போராடுவது இன்றைய நமக்காக அல்ல. நாளைய எமது சந்ததிக்காக. நாம் போராடுவோம், மடிவோம். ஆனால் எம் சந்ததி என்றோ ஒரு நாள் சமாதானத்தில் மன நிறைவு கொள்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு" என்றாயே. ஆம் அண்ணா அதைத்தான் நினைத்து மகிழ்வடைகின்றேன்.

இயேசு மீட்பராக அன்பு என்ற ஆயுதம் தாங்கினார். இரத்தம் சிந்தி மீட்பளித்தார். நீயும் அவரது சிந்தனையை ஏற்றாய். ஆனால் துப்பாக்கி என்ற ஆயுதத்தை நீதி என்ற விடிவிற்காய் தூக்கினாய். உன்னை நான் இழந்தேன். உன்னைப்போன்ற எத்தனையோ சகோதரங்களை இழந்தேன். ஆனால் இன்று உனது வார்த்தையை நினைக்கின்றேன். உன் நம்பிக்கை, விடாமுயற்சி, தியாகம் வலிமையை நினைத்து மகிழ்கின்றேன். நன்றி கூறுகின்றேன். என் வாழ்விற்கு, பணிக்கு நீ விட்டுச் சென்ற இந்தப் புதையல்களை அடிக்கடி திறந்து பார்த்து பயன்படுத்த முயற்சி செய்கின்றேன். இன்று நான் மகிழ்வை சுவைக்கின்றேன். சமாதானப் புறாவாய் நீ அங்கிருந்து நிலையான அமைதிக்காய் செபிப்பாய் என நம்புகின்றேன். அன்பு என்ற முத்தம் தந்து என் வரைதலை நிறைவு செய்கின்றேன். அன்புடன்

*சி. கொன்சி குரூஸ், தலைமன்னார் கிராமம்.*

## இளைஞனே சற்று சிந்தி - வெற்றி உனதே

இளைஞனே உன்னால் எட்டிப்பிடிக்க முடியாத உயரம் எதுவும் இல்லை, உன்னால் கடக்க முடியாத தூரம் என்றும் எதுவும் இல்லை. உன்னால் சாதிக்க முடியாது என்று எதுவுமே இல்லை, எல்லாமே உனக்குள்தான் புதைந்து போய் இருக்கிறது.

மரங்கள் வளர்வதை கொஞ்சம் பாருங்கள். அது திடீர் என முளைத்து கிளைவிட்டு உயர்ந்து விடுவதில்லை. மண்ணுக்கள் விழுந்து புதையும் சீரிய வெப்பம் விதை பூமியை முட்டி மோதி கொழுந்து விட்டு வெளியே வருகிறது. சின்ன சின்ன தளிர்களால் முகம் காட்டி மகிழ்ச்சியால் பூமியை வியப்புடன் பார்க்கிறது. அதன் இலைகளை சின்னஞ்சிறார்கள் கிள்ளி விளையாடுகின்றானர். எனினும் அது தளராமல் வளர்கிறது. மீண்டும் துளிர்க்க ஆடு, மாடுகள் அதை பதம் பார்க்கிறது. எனினும் அது வாடாமல் வதங்காமல் மீண்டும் மீண்டும் இலைகளால் கிளைகளாய் படர்ந்து உயர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதனையும் மருந்துக்கென்றும், அதன் கொழுந்தையும் பட்டையையும் கொய்தும் வெட்டியும் எடுப்பர். எனினும் அது தளர்வதில்லை. ஆம் இளைஞனே இந்த மரம் எமக்கு கற்றுத்தரும் பாடம் என்ன உறுதிதானே! தளிர்களை கிள்ளியபோதும், இலைகளை பறித்தபோதும், கிளைகளை முறித்தபோதும் புயலும், மழையும் அதை அசைத்து பார்த்தபோதும், கோடரிகள் வெட்டி வீழ்த்தியபோதும் அது தளர்ந்து போகாமல் வளர்ந்து இருக்கின்றதே எப்படி? பூமியைக் கீறி வேர்களை திசையெங்கம் பரப்பி நீரைத்தேடிய அந்த வேர்கள் உழைக்க மறுத்திருந்தால் இந்த மரம் பூத்திருக்குமா? சிந்தியுங்கள்!

ஆம். இந்த மரத்தைப்போல உன்னிடம் உறுதியிருந்தால் உன் வாழ்க்கையும் உறுதியாகும். எமது அன்றாட வாழ்க்கையில் நாம் ஆயிரம் ஆயிரம் இன்னல்களையும், இடையூறுகளையும், இடைஞ்சல்களையும், இகழ்ச்சிகளையும், இல்லாமையையும், இழிவுகளையும், இன்னும் வறுமையையும், வாதங்களையும் வலிகளையும், வருத்தங்களையும், வலுவின்மையையும் சந்திக்கலாம். இவைகளுடன்கூட வெறுப்புக்களும் நாம் பெறலாம். இவைகளே எமக்கு சவால்கள். உறுதி உன்னை உயர்த்தும்.

அ. றொஷாந், 8ம் வட்டாரம், பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

கே. பதில் தெரியாத கேள்விகளைக் கண்டால் என்ன செய்வீர்கள்?

*செல்வி. மரியை, மன்னார்.*

ப. அடுத்த கேள்விக்கு தாவி விடுவேன்.

கே. உலகில் உள்ள எல்லா மனிதர்களும் புரிந்து கொள்ளக் கூடிய புது மொழி ஒன்றைக் கண்டு பிடித்து அதை எல்லோரும் கற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்று ஒரு உலகச் சட்டம் கொண்டு வந்தால் எப்படி இருக்கும்?

*ஏ. அன்ரனி தாஸ், வவுனியா.*

ப. ஏற்கெனவே அப்படி ஒரு மொழி இருக்கிறது அதன் பெயர் - புன்னகை.


கே. அழகில் சிறந்தவர்கள் ஆண்களா? பெண்களா?

*பரமானந்தன், கண்டி*

ப. ஆண்கள் என்று சொன்னால் என்னைப் பற்றி தப்பாய் நினைப்பீங்க. ஆகவே சத்தியமாய் பெண்கள் தாங்க அழகு. உண்மையில் விலங்கினத்தில் ஆண்கள்தான் அழகு. ஆண் சிங்கத்தின் பிடரியில் இருந்து ஆண் மயிலின் தோகை வரை! பிடரி அடர்த்தியாக ஆக தோகை வளர வளர காதலிகள் அதிகமாவர்? அது ஏனோ, மனித இனத்தில் மட்டும் பெண்ணிடம் அழகு அப்படிக் கொஞ்சுகிறது?

■ கே. பெரியப்பா, உங்களைப் பாதித்த அண்மைய சர்வதேச சங்கதி?

*ம. மேரி டொறத்தி, வவுனியா.*



ப. தலை ஒட்டிப்பிறந்த ஈரான் நாட்டைச் சேர்ந்த இரட்டைச் சகோதரிகளின் மரணம். தலை ஒட்டிப் பிறந்த லேடன் பிஜானி, லாலே பிஜானி என்ற இணை பிரியாத அபூர்வ சகோதரிகள் அவர்கள். இந்த உடல் நிலையினும் அவர்கள் 29 வயது வரை எப்படியோ வளர்ந்திருக்கிறார்கள். வியப்பூட்டும் நெஞ்சுறுதியோடும் உற்சாகத்தோடும் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்து வாழ்க்கைப் படிகளில் வேகமாக ஏறியிருக்கிறார்கள். தலை ஒட்டிப் பிறந்தாலும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்தார்கள். - மனிதன் என்றாலே அவனது உயர்ந்த இலட்சியம் சுதந்திரம்தானே? மற்றவர்களைப்போல சுதந்திரமாக நடமாட முடிவு செய்தார்கள். சிங்கப்பூர் மருத்துவமனை ஒன்றில் அவர்களைப் பிரிக்க முடியும் என்ற முழு நம்பிக்கையோடு 24 டாக்டர்கள் 52 மணிநேரம் சத்திர சிகிச்சை செய்தார்கள். வெற்றிகரமாக மூளையைப் பிரித்து, இருவர் உடலையும் தனித்தனியாகப் பிரித்து விட்டார்கள். ஆனால் ரத்த சேதம் அதிகமாகவே முதலில் லேடன் இறந்தார். அடுத்து லாயேயின் உயிர் பிரிந்தது. தாங்கள் தனித்தனி உடலாகப் பிரிந்ததை அறியாமலேயே அவர்கள் இறந்து போனார்கள்.

கே. பெரியப்பா திருநாட்கள் வந்தால் மட்டும் ஏன் குதுகலமாக இருக்கிறார்கள் அதுபோல் எந்நேரமும் இருக்கலாம்தானே?

*வ. சுனித்தா(துசா), பெரிய முறிப்பு, குஞ்சுக்குளம்.*

ப. ஒவ்வொரு நாளும் புரியாணிச் சாப்பாடு சாப்பிடுவது சாதாரணமாக சாத்தியப்படுமா, அல்லது அது வயித்துக்குத்தான் சரிப்பட்டு வருமா?

கே. அன்பின் பெரியப்பா, பிள்ளைகள் இல்லாத குடும்பங்களினை திருக்குடும்பம் என்று சொல்லலாமா? ஏன்?

*வே. அலன் றோஜி, இசைமாலைத்தாழ்வு.*

ப. பிள்ளைகள் இல்லாத குடும்பங்களை திருக்குடும்பம் என்று தாராளமாகச் சொல்லலாம். பிள்ளைகள் இல்லாத நிலை திரு வாக (தூய - பரிசுத்தம்) இருப்பதற்கு எந்தத் தடையையும் ஏற்படுத்த முடியாது.

கே. அன்பின் பெரியப்பா சினிமா மோகத்தில் நுழைந்து விட்ட எமது இளைஞர் யுவதிகளை திருத்துவது எப்படி?

*ம. கொண்சலிற்றா, சித்திவிநாயகர் பெண்கள் விடுதி, மன்னார்.*

ப. வாழ்க்கையில் அமைதியையும் நிம்மதியையும் தேடி அலையும் இன்றைய நமது இளைஞர் யுவதிகள் சினிமா என்ற கயிற்றை பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் கயிற்றை விட்டு விடுங்கள் என்று சொல்லும் நாம், அவர்கள் பற்றிப் பிடிக்க இன்னுமொரு சரியான கயிற்றை கொடுக்கத் தயாரா? என்னதான் அந்தக் கயிறு என யோசிக்கிறீர்களா? இறைவார்த்தை - செப அனுபவம் ஆகிய கயிற்றைப் பற்றிப் பிடிக்க நாம் கற்றுக் கொடுத்தால் சினிமா மோகம் என்ற கயிற்றை அவர்கள் இயல்பாகவே விட்டுவிடுவார்கள்.

கே. கடன் கேட்பது சிரமமா? கொடுப்பது சிரமமா?

*பாஸ்கரன், கல்வாரி றோட், பெரிய கோமரசன் குளம்.*

ப. எல்லாவற்றையும் விடச் சிரமம் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பது.

கே. மெய்யான ஆறுதல் எங்கே கிடைக்கும்?

*டெ. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப. இவ்வுலகில் இறை பிரசன்னத்தில் வாழும்போது அதாவது இறைவார்த்தையை வாசித்து செபத்தில் நிலைத்திருக்கும்போது மெய்யான ஆறுதல் கிடைக்கும். இறை பிரசன்னத்திற்குள் வாழும் போது, துன்பம், நோய் கவலைகள் மத்தியிலும் இனம் புரியாத மெய்யான தெய்வீக ஆறுதல் எம்மைச் சூழ்ந்து கொள்ளும். இதுதான் மெய்யான ஆறுதல் இதை விடுத்து கவலையை மறக்க மது, சிகரட், போதைப் பொருள், சினிமா போன்றவற்றை நாடும்போது அது தற்காலிக ஆறுதலைத் தந்து பின்னர் நீண்ட கால துன்பத்திற்கு வழி வகுக்கும்.

■ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவு



மலர்வு 11 - 06 - 1954
உதிர்வு 10 - 08 - 2001

### மரிய கொறற்றி யேசுதாசன் (மனோன்)

**முதலியார்குளம்**

அன்பின் திருவுருவே அணையாத தீபச் சுடரொளியே அம்மா நீ மரிய கொறற்றி என்னும் நாமம் கொண்டு உற்ற மனைவியாக அன்பின் அன்னையாக இல்லத் தலைவியாக இருந்து எமக்கு இறையருள் வாழ்வு ஊட்டி இறை வார்த்தையில் இணைபிரியா இன்பம் கொண்டு வாழ்ந்தாய். ஆண்டிரண்டானாலும் நீங்காத நினைவுடன் வாழுகின்ற தாயே நீ இல்லாத எம் வாழ்வில் நிம்மதி கெட்டு நெஞ்சம் தீயாகக் கொதிக்கிறது அம்மா உன் மறுவாழ்வு மகிழ்வுறவே இறைவனிடம் கண்ணீரைக் காணிக்கையாக சொரிகின்றோம் எம் இறுதி மூச்சு உள்ளவரை உனை மறவோம்.

பிரிவால் துயருறும்

கணவர் ஜேசுதாசன், மகன்மார் றேகன், றேமன், மயூரன், சகோதர சகோதரிகள், மைத்துணர், மைத்துனிகள், பெறாமக்கள், மருமகன்.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 22. - 01 - 1919
உதிர்வு 04 - 09 - 2002

### சீ. அந்தோனியப்பு வாஸ்

**வங்காலை - 04**

ஓராண்டு உருண்டோடினும்
உங்கள் உவகை பூத்த திருவதனம்
எம்முள்ளமதை விட்டகலாதய்யா

பாராண்டு நீர் பகர்ந்த பொன்மொழிகள்
பதினொரு பிள்ளைகளின் வாழ்வில்
நல் வழிகாட்டும் ஐயா

நூறாண்டு எம்முடன் வாழ்வீர் என
விரும்பினோம் தந்தாய் உம்மை
தன்னுடன் வாழ அழைத்தாரோ
விண்ணகத் தந்தை.

உம் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 22 - 01 - 1991
உதிர்வு 06 - 09 - 2002

### செல்வி. அ. பிறேமதி (நித்திலா)

**(கற்கிடந்த குளம், முருங்கன்)**

பாசத்தால் அனைவரையும் வென்ற எம்மவளே உன் பாசமுகம் காணாமல் நாங்கள் வாடுகின்றோம். வாடா மலராய் நீ வாழ்வாய் என நினைத்து கூடி மகிழ்ந்தோமே நாங்கள். இங்கே பதினொரு வயதினிலே பச்சைக் குழந்தைபோல் எம்மைச் சுற்றிவந்தாயே நித்திலா என்றழைத்ததும் - நீ பாசத்துடன் பக்கமே நிற்பாயே ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டு மறைந்தாலும் எம்மால் உம்மை மறந்துவிட முடியாத ஓவியம் நீ செல்வமே உருகித் தவிக்கின்றோம் உன்னைப்பிரிந்தே தினம் குமுறி அழுகின்றோம் உன்னை நினைத்தே என்றும் நீங்காத நினைவுடன் உன் ஆன்ம சாந்திக்காக இறைஞ்சி நிற்கும்

அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், உற்றார், உறவினர்கள்.

## 60ம் நாள் நினைவு



மலர்வு 28 - 04 - 1918
உதிர்வு 28 - 06 - 2003

### அருட்சகோதரி. கிறாசியா

**(வங்காலை)**

அன்பான சின்னம்மா அன்புள்ள மாமி துறவறமே மெய்யறமாய் அணிந்த நீங்கள் எங்கள் இல்லங்களிலும் அவற்றை விதைத்து உங்கள் இன்பத்தில் எங்கள் இல்லங்களையும் மகிழ வைத்தீர்களே, ஆண்டவன் அருளில் அனுதினமும் வாழ காணும் இடமெல்லாம் கடவுள் மொழி பொழிவீர்களே, உங்கள் உருவம் காண கண்கள் மறந்தாலும் உங்கள் அன்பு நிறை வார்த்தைகளும் செயல்களும், புத்திமதிகளும் வழிகாட்டலும் எங்கள் இதயம் விட்டு என்றுமே நீங்காது. காலம் நிறைவுற்றது கடவுளடி சேர என வயோதிப இல்லம் சேர்ந்து நிம்மதியாய் துயில் கொண்ட உங்கள் ஆன்மா சாந்திபெற தினமும் இறைவனை வேண்டுகின்றோம். வயோதிப காலங்களிலும் கடைசி வேளையிலும் உள்ளத்தாலும் உடலாலும் உதவி புரிந்த கன்னியர் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றி

பிரிவால் துயருறும், சகோதர குடும்பம்

## 31ம் நாள் நினைவு



மலர்வு 08 - 04 - 1950
உதிர்வு 28 - 06 - 2003

### ச.யேசுதாசன் சம்பாய்வா

**(கற்கிடந்தகுளம்)**

அன்பினில் எம்மை வைத்தாய்
அழகோடு எம்மைக் காத்தாய்
இன்புடன் அரவணைத்து
எழிலுடன் தொண்டு செய்தாய்
நன்மைகள் பொங்க வைத்தாய்
நலமுடன் பாடுபட்டாய்
இன்பங்கள் சேர மண்ணில்
துயரின்றிக் காத்து வந்தாய்
இன்னிலம் தன்னில் நாங்கள்
இன்புற வாழச் செய்தாய்
உன்னை நாம் பிரிந்திட்டாலும்
உள்ளமோ தாங்கவில்லை
இறைவனின் பாதம் தன்னில்
இளைப்பாற்றி அடைவீராக
பிரிவினால் துயருறும்
மனைவி பிள்ளைகள்.
மருமக்கள்மார், பேரன்.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 07 - 02 - 1937
உதிர்வு 13 - 09 - 2002

### திருமதி. அ. அன்னம்மா

**(நெடுந்தீவு)**

அன்பின் ஒளிச் சுடரே, பாசத்தின் இருப்பிடமே எம் இல்லத்தின் தியாக தீபமே எம் நல் வாழ்வுக்காக பற்பல துன்பங்களை பாங்குடன் ஏற்று வாழ்ந்த அன்பு அன்னையே எம் ஆறாத்துயரம் தன்னில் - ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்னையே ஆண்டொன்று மறைந்த வேளையிலும்... உம் திருமுகம் எம் நினைவலையில்... நித்தம் நித்தம் மலர்ந்து பாசத்தை... உணர்த்துகின்றம்மா எத்தனை ஜென்மம் எடுத்தாலும் - உம் நினைவோடு வாழ்கின்றோமம்மா உமது ஆன்மா சாந்திக்காக பிராத்திக்கின்றோம்.

இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 13.09.2003 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மன்னார் புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் இணைந்து மன்றாடும்படி அன்பினால் கேட்கும். உங்கள் பிள்ளைகள், சகோதரி குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

## 31ம் நாள் நினைவு



மலர்வு 20 - 10 - 1982
உதிர்வு 28 - 07 - 2003

### யோ.றெ.மைக்கல் குலாஸ்

**(சின்னக்கடை, மன்னார்)**

குடும்பத்தில் ஒரே மகனாய் 21 ஆண்டுகள் பாசத்தை காட்டி எல்லோருக்கும் உதவி செய்வதில் ஆனந்தம் கொண்ட நீ எம்மை ஆழாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு மறைந்து விட்டாயே தம்பி, உனக்கு சிறந்த கல்விச் செல்வத்தை ஊட்டத்தானே கொழும்பு சென்றோம். அதனால்தானோ, அகால மரணத்தின்போதும் புத்தகப் பையுடன் புழுதியில் கிடந்தாயோ தம்பி.

இப்புவியில் உனது சேவை போதும் என்றுதான் கர்த்தர் எனக்கு உதவியாய் உன்னை எடுத்ததனாலோ எமக்கு சகல உதவிகளையும் செய்து, உனது பிரிவை தாங்கும் மனோ வலிமையை தந்து வழி நடத்தினாரோ.

இழப்பு செய்தி கேட்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும், இறுதி கிரிகைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாழும் பெற்றோர், சகோதரி, மற்றும் உன்னை நேசிப்போர்.

## 31ம் நாள் நினைவு



மலர்வு 19 - 04 - 1930
உதிர்வு 21 - 07 - 2003

### சு. சந்தாம் பிள்ளை

**(பள்ளாங்கோட்டை)**

அன்பின் உருவாய் அமைதியின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் தலைவனாய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்து மாதம் ஒன்று சென்றாலும் மனதை விட்டு நீங்காத அன்பு ஐயாவே சரீரத்தை சாறாக பிளிந்து உழைத்து உயர்வு கண்டு, எம்மையும் சீரோடும், சிறப்போடும் வாழவைத்து அமைதியாக தூங்குகின்றீர்களே ஐயா அம்மாவை இழந்தோம் அன்பு காட்ட நீங்கள் இருக்கின்றீர்கள் என்றிருந்தோம் இடை வழியில் ஏமாற்றி சென்று விட்டீர்களே ஐயா மனம் தாங்காமல் அனாதைகளாய் அழுது நிற்கின்றோம், உங்கள் அன்பிற்கு ஈடாக இவ்வுலகில் ஒன்றுமே இல்லை ஐயா உங்கள் ஆன்ம சாந்திக்காக இறையை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள் நினைவு



மலர்வு 24 - 10 - 1926
உதிர்வு 31 - 07 - 2003

### அ.சகோதரி எவறிஸ்ரா தி.கு

நெஞ்சே நீ மீளவும் அமைதிகொள். ஏனெனில் ஆண்டவர் உனக்கு நன்மை செய்தார். ஆண்டவரே, நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும். முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக.

இரங்கல் திருப்பலிகள்

30.08.03 புனித செபஸ்தியார் ஆலயம், மன்னார் காலை 6.15
30.08.03 புனித அன்னம்மாள் ஆலயம், வங்காலை காலை 6.15
30.08.03 புனித அடைக்கலமாதா ஆலயம், யாழ்ப்பாணம் காலை 6.30
30.08.03 புனித வியாகுல மாதா ஆலயம், கொழும்பு காலை 6.30
01.09.03 புனித லூசியா ஆலயம், பள்ளிமுனை, மன்னார். காலை 6.30

இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடிய அனைவருக்கும் நன்றிகள்.

உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல.16
## தீத்து, பிலமோனுக்கு எழுதிய திருமுகம்

உங்கள் விடைகளை 20. 9. 2003 க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | | | * | * | |
| 04 | | | | * | | | | | 05 | |
| | * | * | | 06 | 07 | | | | | |
| | | | | | | | | | 08 | |
| | | | | | | | | | | 09 |
| | | | 10 | | | | 11 | 12 | * | |
| | | 13 | | | | | | | | 14 |
| | | * | | 15 | | | | | * | * |
| | | | | 16 | | | | 17 | | |
| 18 | 19 | | | | 20 | 21 | | | | 22 |

### மேலிருந்து கீழ்
1. .....................களைச் செய்வதில் எல்லாவகையிலும் நீயே முன்மாதிரிகையாயிரு.
2. யாரும் உன்னைத் தாழ்வாக மதிப்பிட ...................
6. முழு அதிகாரத்தோடும் அறிவுறுத்திக் ................ கொள்.
7. வயது முதிர்ந்த ஆண்கள் அறிவுத்தெளிவு, கண்ணியம், கட்டுப்பாடு, ......................களாய் இருந்து நம்பிக்கை, அன்பு மனஉறுதி ஆகியவற்றை நன்கு காத்துக் கொள்ளச் சொல்.
10. வயது முதிர்ந்த பெண்களும் ..................... உடையவர்களாய், புறங்கூறாதவர்களாய், குடிவெறிக்கு அடிமை ஆகாதவர்களாய், நற்போதனை அளிப்பவர்களாய், இருக்குமாறு கூறு. (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
11. நாணயத்தோடும், ......................தோடும் கற்றுக் கொடு.
12. ஏனெனில் ................... கண்காணிப்பாளர்கள் கடவுள் பணியில் பொறுப்பாளர்களாய் இருப்பதால் இவர்கள் குறைச்சொல்லுக்கு ஆளாகாதிருக்க வேண்டும்.

### இடமிருந்து வலம்
1. இதனால் நாம் கொண்டுள்ள .................... அடிப்படையில் நம்மிடையே இருக்கும் நட்புறவு செயல்வடிவம் பெற வேண்டும்.
3. என் ................. உம்மை நினைத்து என் கடவுளுக்கு என்றும் நன்றி கூறுகின்றேன்.
4. ஏற்ற காலத்தில் நற்செய்தியைப் பறைசாற்றியதன் வாயிலாகத் தம் .................... வெளிப்படுத்தினார்.
7. தீமையிலும் பொறாமையிலும் .......................
10. கிறிஸ்து இயேசுவின் ....................... அவர் பொருட்டுக் கைதியாக இருக்கும் பவுலாகிய எனக்குச் சிறையிலிருந்த போது பிள்ளையான ஒனேசிமுக்காக உம்மிடம் வேண்டுகிறேன்.
17. .......................கள் தங்கள் தலைவர்களுக்கு அனைத்திலும் பணிந்து நடந்து அவர்களுக்கு உகந்தவர்களாய் இருக்க வேண்டும்.
19. உம்மால் இறைமக்களின் உள்ளம் ...............ர் பெற்றுள்ளது. (குழம்பியுள்ளது)

### வலமிருந்து இடம்
2. ..................... வாழ்வை, பொய் கூறாத கடவுள், காலங்கள் தொடங்கு முன்னே வாக்களித்தார்.
5. உம்மால் இறைமக்களின் உள்ளம் ................. பெற்றுள்ளது.
8. ...................... உண்மையானது. (இரண்டாவது எழுத்து முன்னே நிற்கிறது)
9. ஏனெனில் நான் குளிர் .................. அங்கே செலவிடத் தீர்மானித்துள்ளேன்.
14. உம் .....................க் குறித்து நான் பெருமகிழ்வும், ஆறுதலும் கொள்கிறேன்.
16. அடிமைகள் தங்கள் தலைவர்களுக்கு அனைத்திலும் பணிந்து .................... அவர்களுக்கு உகந்தவர்களாய் இருக்க வேண்டும்.
22. அவனை அனுப்புவது என் ..................தையே அனுப்புவது போலாகும்.

### கீழிருந்து மேல்
10. அவர் நம் மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவின் வழியாகத் .................. நம்மீது நிறைவாகப் பொழிந்தார்.
13. அப்பொழுதுதான் கடவுளுடைய .............. பழிப்புக்குள்ளாகாது.
15. தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அவர்கள் .................. கீழ்ப்படிய வேண்டும். ( 3வது எழுத்து 4வதாக நிற்கிறது)
18. நீயோ .................. போதனைக்கேற்ப பேசு.
19. ....................... அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார்.
20. கேட்பதற்கு மேலாகவே நீர் ..................... என்பது எனக்குத் தெரியும்.
21. இனி அவனை நீர் அடிமையாக அல்ல, அடிமையை விட .................. அதாவது உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 15றகான முடிவுகளை செப்டம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்**

---

3ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 02 - 1965 உதிர்வு 29 - 06 - 2001

**அந்தோனி ஜோன்சன்**
**(கங்கை அமரன்)**

11ம் ஆண்டு நினைவு



மலர்வு 28 - 11 - 1966 உதிர்வு 25 - 08 - 1992

**அந்தோனி வசந்தன்**
**(எமில் நகர், மன்னார்)**

**வைகறைப் பொழுதுகளில் மலர்ந்த புதல்வர்களே**
**ஆண்டுகள் எத்தனை அகன்றிடிலும் மங்காத பெயருடன்**
**மனத்திரையில் இருக்கையிலே எப்படி உங்களை**
**மறப்போம் மலர்ந்த முகத்தையும் மாசற்ற நெஞ்சத்தையும்**
**மறுபடி காணத்தான் முடியுமோ...**
**உங்கள் பிரிவால் துயருறும்**
**தகப்பன் அந்தோனி, தாய் சரோஜா, சகோதரிகள்,**
**சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.**
**எமில் நகர், மன்னார்.**

---

## நுகர்வுக் கலாச்சாரத்திற்கு. 1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று போர் இடம்பெற்ற காலப்பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்தனர். முதலில் இடம்பெயரும்போது லொறியில் பொருட்களை ஏற்றிச் சென்றனர். இரண்டாவது முறை இடம்பெயரும்போது லான்மாஸ்ரரில் பொருட்களை ஏற்றிச் சென்றனர். மூன்றாம் முறை இடம் பெயரும் போது ஒரு சைக்கிளில் கொழுவும் பேக்குடன் இடம் பெயர்ந்தனர். இவற்றை எல்லாம் நாம் மறந்து இன்று வாழுகின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் போர் அனர்த்தங்கள் மத்தியில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். பனடோல் போன்ற அத்தியவசிய மருந்துகள் கிடையாது. சவர்க்காரம் கிடையாது, மண்ணெண்ணைக்கு நாயாக அலைந்தனர். அகதிகளாக இடம் பெயர்ந்தனர். ஏ - 9 பாதை திறக்கப்பட்டதும் சகல பொருட்களுமே வடக்கே வருகின்றன. யாழ்ப்பாணம் வியாபார மையமாக உள்ளது. பொருட்களை வாங்குவதில் மக்கள் ஈடுபடுகின்றனர். நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை சிந்திக்க வில்லை கடந்த காலம் எப்படி வாழ்ந்தோம் என்பதை சிந்தியுங்கள். இந்த நாட்டில் சமாதானமும், அமைதியும் வேண்டும் என்று சகல இன மக்களும் விரும்புகின்றனர். இக்கொடிய யுத்தம் வேண்டாம் என்று சகலரும் கூறினர். 2001ம் ஆண்டு மடுமாதாவின் திருச்சுருவம் மடுவில் இருந்து தென் பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது தென்பகுதி மக்கள் என்ன கேட்டனர்? தாயே எம் நாட்டுக்கு சமாதானத்தை ஈன்றருளும் என்றனர். 20 வருடங்களுக்குப் பிறகு மடுவிற்கு சகல இன மக்களும் வந்துள்ளனர். அதற்கு காரணம் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையே. புதுமைகள் நிறைந்த மடுத்திருப்பதியில் சகல இன மக்களும்

---


## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம்
உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள்
முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து
உங்கள் சந்தாவை உரிய காலத்தில்
புதுப்பித்துக்கொள்ளுங்கள்.
மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 1000 (10 யூரோ)


## அனைத்துத் தொடர்புகளுக்கும்








பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி
நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar,
Sri Lanka.

தொலைபேசி : 023 - 2232377




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

**விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 14ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*
ப. பத்ம சறோஜினி,
லூட்ஸ்கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

*இரண்டாம் பரிசு*
திருமதி. மனோரஞ்சன்,
மொன்சிறேன்,
பிரான்ஸ்.

*மூன்றாம் பரிசு*
தொம்சன் பிலிப்,
புளோறிவீதி,
நற்பிட்டிமுனை, கல்முனை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 222 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 209 பேர்

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 14ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. கிறிஸ்ரீனா சில்வா, பெ.ப.வி. மடுக்கோவில், No. 50
2. மைலின் பீரிஸ். 8ம் வட்டாரம், பேசாலை.
3. வி. பற்றிக் பிரசாத், சிதம்பர புரம், வவுனியா.
4. எம். மரியம் றொசாணி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
5. டெ. பிரபு பெரேரா, 8ம் வட்டாரம், அன்ரனிஸ்வீதி, பேசாலை.
6. வி. றொபினா றோச், பள்ளிமுனை, மன்னார்.
7. ரா. திருச்செல்வி, புனித யூதாதேயு திருத்தலம், பாசறை பங்கு
8. எம். லூசியா பிகிறாடோ, பள்ளிமுனை.
9. இ. செபஸ்ரியான் லோகு, அரிப்பு, முருங்கன்.
10. செ. ரஞ்சி, பெரிய கோமரசன் குளம், வவுனியா.
11. டு. ஜெரினா, வீட்டுத்திட்டம், முதலியார் குளம்.
12. யோ. அருள்தாஸ்,ஆயுள்வேதமருந்தகம், பூங்காவீதி,வவுனியா.
13. டெ.டென்சியாபெரேரா, 8ம்வட்டாரம், அன்ரனிஸ்வீதி, பேசாலை.
14. மு. அந்தோனிதாஸ், கற்கிடந்தகுளம், முருங்கன்.
15. சி. நித்தியா, நொச்சி குளம், உயிலங்குளம்.
16. ம.வியாகுலராணிலம்பட்,அன்புக்கன்னியர்இல்லம், செட்டிகுளம்.
17. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு, முருங்கன்.
18. நீக்லஸ் காகு, அரிப்பு, முருங்கன்.
19. நி. சுமித்திரா, மன்.முருங்கன் ம.வி.
20. எம். மேரி மெக்ரலின் பெரேரா, 5ம் வட்டாரம், பள்ளிமுனை.
21. ப. யோன்சி, திருக்குடும்ப கன்னியர் மடம், வங்காலை.
22. எவ். ஏ. கிறிஸ்ரி றோச், ஆரம்ப நீதிமன்றம், மன்னார்.
23. ம. இருதய டெறிக்ஸ் சில்வா, பெ.ப.வி. இல. 50
24. ஜெனிலா பெசிலா கூஞ்ஞ, தாழ்வுபாடு, மன்னார்.
25. அ. வெனான்சியுஸ் றஜீவன், ஆலங்குளம், வட்டக்கண்டல்..
26. ஜீன் சிந்தியா சந்தியாப்பிள்ளை, கார்மல் மடம், கல்முனை.
27. ச. சுபாஜினி, கார்மேல் மடம், கல்முனை.
28. ஏ. அஜந்தன், வெளிக்குளம், வவுனியா.
29. எம். கிறேஸ் பற்றிமா, 5ம் வட்டாரம், பள்ளிமுனை.
30. எஸ். பிரிய தர்சினி, தலைமன்னார் ஸ்டேசன், தலைமன்னார்.
31. பி. லூட்ஸ் ஏஞ்சல், 5ம் வட்டாரம், பள்ளிமுனை.
32. யோ. மேரி றூபினா குரூஸ், தலைமன்னார் மேற்கு.
33. டி. வில்லியம், மணற்குளம், உயிலங்குளம்.
34. யோ. ப. அனுஷியா, இல. 250, சாவற்கட்டு, ஓல்லிமோட்டை.
35. வே. நொயலின், பிச்சகுளம், முருங்கன்.
36. எல். ஆனந்தன் குலாஸ், 7ம் வட்டாரம், வங்காலை.
37. சந்தான் கொன்சிலா, வண்ணாகுளம், அடம்பன்.
38. மேரி டிவோட்டா, பள்ளக்கமம், முருங்கன்.
39. அ. டிலைக்ஷன், பிச்சக்குளம், முருங்கன்.
40. ஜெ. எஸ். லிற்வினியா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
41. பே. அனற் டயானா, தி.கு. கன்னியர் மடம், நானாட்டான்.
42. யோ.ப. மேரி,யோசப்பின்புளோரன்ஸ், தாழ்வுபாடுவீதி, மன்னார்.
43. ப. கொன்சால் டயஸ், யூட்ஸ் வீதி,, 7ம் வட்டாரம், பேசாலை.
44. அ. தர்சன் சம்பாய்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
45. நிலூஜினி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
46. ப. ஞானசௌந்தரி, பெரிய குஞ்சுக்குளம், முருங்கன்.
47. பி. நிஷாந்தன் (மோய்ஸ்), ஓலைத்தொடுவாய், பேசாலை.
48. சூ. ஜெப நேசன், புதுக்கமம், உயிலங்குளம்.
49. எ.யூட் அமல்ராஜ், மகா றம்பைக்குளம், வவுனியா.
50. பி. அனித்தா, கொத்மலை, கண்டி.

---

## *விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி*
*இல. 14 ( திமொத்தேயு –1)*

### சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**
1. பணிவுடனும் (3:4)
4. இம்மை (4:8)
5. கப்பல் (1:19)
9. தூணும் (3:15)
13. திருத்தொண்டி (1:12)
15. இடையே (2:5)
16. தாழ்வாக (4:12)
22. கண்காணி (3:6)
23. நற்செய்தி (1:11)


**வல்மிருந்து இடம்**
2. வார்த்தையும் (4:5)
3. இழி (3:7)
6. வாழும் (4:10)
11. துணையாக (1:19)
13. திருத்தொண்டு (3:13)
17. நன்கு (1:19)
18. இராதே (5:1)
19. பகர்ந் (2:6)
20. துணிவோடு (3:13)

**மேலிருந்து கீழ்**
1. பழிச்சொல் 6:1
2. வாழ்வை 6:19
4. இறைப்பற்று 4:8
7. அமர்த்தாதே 5:22
8. ஆதாயம் 6:6
10. கண்ணியமும் 2:2
13. திருப்பணி 4:14


**கீழிலிருந்து மேல்**
5. கண்ணி (3:7)
8. ஆணிவேர் (6:10)
12. பணிவு (6:11)
13. திருச்சட்டம் (1:9)
14. தொண்டராய் (4:6)
21. வலுவூட்டு (1:12)
23. நல்லதை (6:18)

மன்னா

# முருங்கன் வைத்தியசாலையில் புதிய சிற்றாலயம்



புதிய சிற்றாலயத்தை திறந்து வைத்து மன்னார் ஆயர் அவர்கள் உரையாற்றுகின்றார்.



முருங்கன் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியும் அவரது பாரியாரும்



முருங்கன் வழிபாட்டுக்குழு தலைவர் திரு அல்மேடா நன்றியுரை நிகழ்த்துகிறார்.

முருங்கன் மாவட்ட வைத்தியசாலை வளவினுள் ஒரு புதிய சிற்றாலயம் 05.08.2003 அன்று மன்னார் ஆயர் அதி வந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களைக் குணமாக்கும் வழிபாடும் அருட்பணியாளர் யூட் குருஸ் அடிகளாரால் நடத்தப்பட்டது. முருங்கன் பங்குத் தந்தை அருட்பணியாளர் தேவசகாயம் பிள்ளை அடிகளாரின் அயராத முயற்சியாலும் முருங்கன் பங்குச் சபையினரின் பங்களிப்பாலும் கட்டி முடிக்கப்பட்ட இப்புதிய ஆலயத்தில் இறை இரக்க ஆண்டவரின் திருச்சொரூபம் வைக்கப்பட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இறை இரக்க வழிபாடு நடைபெறுகிறது. இவ்வாலயத்துக்கான அடிக்கல் 16.06.2002ல் டாக்டர் சிவபாலன் அவர்களால் நாட்டப்பட்டது.

## மறைமாவட்ட இளைஞர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள்

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டமானது 23 அங்கத்தவர்களைக் கொண்டு 18. 7. 2003 அன்று மாலையில் மறைக்கல்விப் பணிமனையில் மன்னார் மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை ஞானாதிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர் அருட்தந்தை மேரியஸ் அடிகளாரும் மன்னார் ம்றைமாவட்ட உதவி இயக்குனர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளாரும் மன்னார் மறைமாவட்ட இணைப்பாளர் வசந்தகுமார் அடிகளாரும் ஓமந்தை உதவிப்பங்குத் தந்தை ராஜநாயகம் அடிகளாரும் வருகை தந்திருந்தார்கள். தலைவர், செயலாளர், பொருளாளர் நிர்வாகக் காலத்தில் திறம்பட செயல்பட்டமைக்கு குழுமியிருந்தவர்கள் சார்பாக இயக்குனர் நன்றி கூறியதுடன் தலைவருக்கு ஞாபகார்த்த அன்பளிப்பும் வழங்கப்பட்டது. இவ்வன்பளிப்பை தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது.

| | |
|---|---|
| தலைவர் | - பேசாலை பங்கைச் சேர்ந்த அனுஸ்ரன். |
| செயலாளர் | - வங்காலை பங்கைச் சேர்ந்த ராஜினி |
| பொருளாளர் | - பள்ளிமுனைப் பங்கைச் சேர்ந்த யாட்சன் |
| உப தலைவர் | - ஆட்காட்டிவெளி பங்கைச் சேர்ந்த அஞ்சலா |
| உப செயலாளர் | - தலைமன்னார் பங்கைச் சேர்ந்த அருண் |
| உப பொருளாளர் | - பம்பமடு பங்கைச் சேர்ந்த ஜோர்ச் |

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களை சரியான முறையில் செய்வதாக உறுதி மொழி கூறி பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.

## இலத்தீன் அமெரிக்காவில் குருக்கள் பற்றாக்குறை

இலத்தீன் அமெரிக்க கத்தோலிக்க திருச்சபை இறை அழைத்தலை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென திருப்பீடம் அழைப்பு விடுத்துள்ளது. இலத்தீன் அமெரிக்காவில் குருக்கள் பற்றாக்குறைவினால் அனைத்து கிராமங்களிலும் மாதத்திற்கு ஒரு திருப்பலியே நிகழ்த்தப்படுகிறது. திருச்சபையின் ஆண்டு புள்ளி விபரக் கணக்கின்படி கியூபாவில் 20874 ஆயிரம் கத்தோலிக்கருக்கும் கொண்டராசில் 14035 கத்தோலிக்கருக்கும் குஜராசாவில் 10835 கத்தோலிக்கர்களுக்கும் ஒரு குரு என்ற நிலை காணப்படுகிறது.

## முருங்கன் பெரிச்சார் கட்டில் புதிய ஆலயம்



முருங்கன் பங்குக்கு உட்பட்ட பெருச்சார் கட்டு எனுமிடத்தில் புதிய ஆலயம் ஒன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களின் உதவியினாலும் கிராம மக்களின் பெரும் பங்களிப்பினாலும் கட்டி முடிக்கப்பட்டு 05.08.2003 அன்று ஆயரினால் திறந்து வைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டது. புனித அந்தோனியாரின் திருவிழாத்திருப்பலியும் ஆயரின் தலைமையில் அன்றைய தினம் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ள அயற் கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்திருந்தனர். மறையுரை ஆற்றிய ஆயர் அவர்கள் கிராம மக்களின் ஒற்றுமையைப் பாராட்டியதுடன், அன்பியம் இங்கு தழைத்தோங்க வேண்டுமெனவும் ஆசி வழங்கினார். பங்குத் தந்தை அருட்பணி தேவசகாயம்பிள்ளை அடிகளார் அனைத்து நிகழ்வுகளையும் திறம்பட நடத்தி முடித்தது பலராலும் பாராட்டப்பட்டது.

## பாப்பரசரின் வெள்ளி விழாவை முன்னிட்டு லூர்துபதியில் சர்வதேச குருக்களுக்கான தியானம்

திருத்தந்தையின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஒக்டோபர் மாதம் 11ம் திகதியிலிருந்து 15ம் திகதி வரை பிரான்ஸ் லூர்துபதியில் சர்வதேச குருக்களுக்கான தியானம் ஒன்று நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தியானத்தின்போது உலகின் பல நாடுகளிலிருந்தும் கலந்துகொள்ளும் ஆயிரக்கணக்கான குருக்கள் பவனியாக லூர்து அன்னை காட்சிகொடுத்த இடத்திற்கு நடந்து செல்வார்கள். தியானத்தின் இரண்டாவது தினமான ஒக்டோபர் 12ம் திகதி பாப்பரசர் அருள் சின்னப்பர் வத்திக்கான் மாளிகையிலிருந்து தொலைக்காட்சி மூலமாக தம் செய்தியினை உலகெங்கும் பரந்து பணிபுரியும் கத்தோலிக்க குருக்களுக்காக வழங்குவார். அச்செய்தியை உலகின் பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்ப ஒழுங்குகள் செய்துள்ளன.

## மும்மதத்தினரது அமைதிக் கொடிமரம்

உலக அமைதிக்கான ஒன்றிணைந்த முயற்சியின் ஒரு பகுதியாக பாகிஸ்தானின் கிறிஸ்தவ இந்து, இஸ்லாமிய பிரதிநிதிகள் இணைந்து அமைதிக் கொடிமரம் ஒன்றை நாட்டியுள்ளனர். உலகில் அமைதி நிலவட்டும் என எழுதியுள்ள இக்கொடிமரத்தை முல்டான் என்ற இடத்தில் இம்மும்மத பிரதிநிதிகள் நட்டனர். டொமினிக்கன் துறவு சபைக்கு சொந்தமான இடத்தில் நாட்டப்பட்டுள்ள இக்கொடிமரத்தின் நான்கு பகுதிகளிலும் ஆங்கிலம். உருது இத்தாலியம் மற்றும் அராபிய மொழிகளில் அமைதிச் செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

## மனித மாண்புக்கு உட்பட்ட மருத்துவ ஆய்வு

இக்காலத்தில் மருத்துவத்துறையில் நடாத்தப்படும் மனிதனைப்பற்றிய ஆராய்ச்சிகளில் நன்னெறி விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்பதை திருச்சபை உறுதியுடன் பேசத்தவறினால் ஒரு காலத்தில் பேசாதிருந்த குற்றத்திற்காக மனம் வருந்த நேரிடுமென திருத்தந்தை எச்சரித்தார். திருப்பீட வாழ்க்கைத்துறை நடத்திய மூன்றுநாள் கருத்தரங்கில் கலந்துகொண்ட சுமார் 160 மருத்துவ ஆராச்சியாளர்களை வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை மனிதனைப்பற்றிய மருத்துவ ஆராய்ச்சிகளில் வாழ்வைப் பாதுகாப்பது மனித மாண்பு ஆகியவை மதிக்கப்படுவது குறித்து மருத்துவர்கள் கவனமாய் இருக்குமாறு கேட்டுக்கொண்டார். மருத்துவ ஆய்வு மற்றும் நல்வாழ்வைப் பேணுவதில் ஏழை பணக்கார நாடுகளுக்கிடையில் காணப்படும் ஏற்கமுடியாத கடும் வேறுபாட்டைக் குறிப்பிட்ட திருத்தந்தை எயிட்ஸ் நோயால் துன்புறும் அநேக ஆபிரிக்க நாடுகள் பற்றிய கவலையையும் வெளியிட்டார்.

## மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின சாதனைகள்

மன்னார் மாவட்டத்தில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியானது பல்வேறு துறைகளிலும் புதிய சாதனைகளைப் படைத்து வருவது பெருமைக்குரியதாகும்.

க.பொ.த.(உ.த) பரீட்சையில் கணிதப் பிரிவில் காலாகாலமாக முதன்மை நிலையை வகித்து வெற்றியை தனதாக்கி கொண்டுள்ளது. 2003ம் ஆண்டு க.பொ.த (உ.த) பரீட்சையில் கணிதப்பிரிவில் செல்வன் து. டனிஸ்ரன் 2A, 1B பெறுபேறுகளை பெற்று மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளான். பல்கலைக்கழகத்திற்கு கணிதப்பிரிவில் 5 மாணவர்கள் பொறியியல் பீடத்திற்கும், 3 மாணவர்கள் ஏனைய துறைகளுக்கும் விஞ்ஞான பிரிவில் 2 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கும் ஒரு மாணவன் பல்வைத்தியத்திற்கும் வர்த்தகப் பிரிவில் செல்வன் பு.அமலநாதன் 1A, 2B பெறுபேறுகளை பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளான். 8 மாணவர்கள் வர்த்தக பீடத்திற்கும் கலைப்பிரிவில் 3 மாணவர்களும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். அத்துடன் நுண்கலைப் பீடத்திற்கு 3பேரும் தெரிவாகியுள்ளனர். கடந்த வருடம் 17 மாணவர்களும் இவ்வருடம் 25 மாணவர்களும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வருடம் வலயமட்ட ஆங்கில மொழிதின போட்டியில் 24 முதலிடங்களையும் 12 இரண்டாம் இடங்களையும் 6 மூன்றாம் இடங்களையும் பெற்று எம் மாணவர்கள் ஆங்கிலமொழியிலும் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கோட்ட மட்ட சமூகக்கல்வி போட்டியில் 7 மாணவர்கள் திறமையாக பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெற்றுள்ளனர். கையெழுத்து சஞ்சிகை போட்டியில் எம் மாணவர்கள் தமது சுய ஆக்கங்களை மிகத் திறம்பட எழுதி நூல் வடிவமைத்ததற்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்று பரிசில்களை தக்க வைத்துக்கொண்டது கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களது அயராத உழைப்பின் வெற்றியாகும்.

மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் அதிபர் சங். அருட்சகோ. ஸ்ரனிஸ்லாஸ், 1 வருடத்திற்கு (22.04.2003 தொடக்கம் 22.04.2004 வரை) கல்வி முகாமைத்துவப் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு சென்றுள்ளதால், பிரதி அதிபராக கடமையாற்றிய சங். அருட்சகோ. எஸ். இ. றெஜினோல்ட் இவ் ஒருவருடத்திற்கு அதிபராக கடமை ஏற்றுள்ளார். இவர்களை மன்னா வாழ்த்துகின்றது.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org